# ஆதி சங்கராசாரியார் 170

சி. எஸ். இராமசாமி ஐயர்
எழுதியது

AJA BARFOBI 8

துரைத்தனத்தார் அங்கீகரித்தது

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

1924

ரிஜிஸ்தர் செய்தது] [விலை 4 அணா

PRINTED AT
THE "CAXTON PRESS"
MADRAS

# முகவுரை

நம் தேசத்துச் சிறுவர் சிறுமியர்களுக்கு மகான்களுடைய சரிதம் தெரியவேண்டிய தவசியம். ஆனதுபற்றி ஆதி சங்கராசாரிய சுவாமிகளின் திவ்விய சரித்திரம் எளியநடையில் யாவருக்கும் விளங்குமாறு எழுதப்பட்டிருக்கிறது. இதில் மூன்று சித்திரப்படங்களைப் பிரசுரிக்க சிருங்ககிரி மடத்தின் அதிகாரிகள் நமக்கு உத்தரவு அளித்ததற்காக அவர்களுக்கு நமது வந்தனத்தையளிக்கின்றோம். மற்ற மகான்களின் சரித்திரங்களும் வெளிவரும்.

சி. எஸ். இராமசாமி ஐயர்.



ஆதி சங்கராசாரிய சுவாமிகள்

# ஆதி சங்கராசாரியார்.

குழந்தைகள்: அப்பா! இன்று ஏதாவது ஒரு நல்ல கதை சொல்லுங்கள்:

தகப்பனார்: குழந்தைகளே! உங்களுக்கு ஆதி சங்கராசாரியாரது திவ்விய சரித்திரத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

வெகுகாலத்திற்குமுன் கொச்சிராஜ்யத்தில் காலடி என்ற கிராமத்திற்குச் சமீபத்தில் ஒருவன் அரசுபுரிந்து வந்தான். அவ்வரசன் பெயர் ராஜசேகரன். அவன்தான் காலடி என்ற கிராமத்தை உண்டுபண்ணினன். காலடியில் ஆல்வாய் நதி ஓடுகிறது. அதற்குச் சூர்ணிப்புழை என்றும் பெயர். அவ்வூரின் நாலாபக்கங்களிலும் விசாலமான தோட்டங்களும் அவைகளுக்குள் வீடுகளும் இருக்கின்றன. ஒரு புராதன கிருஷ்ணன் கோயிலும் நதிக்குச் சமீபத்தி லிருக்கிறது. அக் கிராமத்தில் நம்பூத்திரி பிராமணர்கள் வசித்துவந்தார்கள்.

ராஜசேகரன் அரசுபுரிந்துவருகையில், அவனது முக்கியபட்டணத்திற்குச் சமீபத்தில் ஒரு சிவலிங்கம் தோன்றிற்றும். அவ்வரசன் அங்கே ஒரு கோயில் கட்டிவைத்து சிவலிங்கத்திற்குப் பூசைசெய்ய நம்பூத்திரி பிராமணர்களை அமர்த்தினன். ஆனதுபற்றி

காலடியில் அநேகம் பிராமணர்கள் குடியேறினர்களாம். அவர்கள் கல்வி கற்றவர்கள். அவர்களில் சிறந்த வித்துவான் ஒருவ ரிருந்தார். அவர் பெயர் வித்தியாதிராஜர். இப்பெயர் அவரது கல்வித் திறமைக்காக அளிக்கப்பட்டது. அவருக்கு சிவகுரு என்ற ஒரே ஒரு குமார னிருந்தான். அவர் தம் குமாரனுக்குக் கல்வி புகட்டிவந்தார்.

சிவகுரு கல்வி கற்று மிக்க சமர்த்தரானர். அவருக்கு விவாக வயது வந்தவுடன் வித்தியாதிராஜர் தகுந்த நல்ல யோக்கியதை யமைந்த குடும்பத்திலுள்ள பெண்ணைத் தமது குமாரனுக்கு விவாகம் செய்வித்தனர். சிவகுரு தமது மனைவியுடன் இல்லறத்தைச் செவ்வனே நடத்திவந்தார்.

அவரும் அவர் மனைவியும் தங்களுக்கு ஒரு மகன் பிறக்கவேண்டுமென்று பரமசிவனைத் துதிசெய்து வந்தார்கள். பெற்றோர்களுக்குப் புத்திரனிருந்தால் தான் அவர்களுக்கு மோக்ஷம் கிடைக்குமென்ற கொள்கை ஆரியர்களிடத்தில் குடிகொண்டிருந்தது. ஆனதுபற்றி புத்திரன் பிறந்தால் அவன் தன் பெற்றோர்களை நகரத்திலிருந்து மீட்பான் என்ற கொள்கை சிவகுருவின் மனதில் ஊன்றியிருந்தது. அதற்காக அவர் கடவுளை எப்பொழும் துதித்துக்கொண்டு வந்தார்.

ஒருநாள் அவரது மனைவியாராகிய ஆரியாம்பாள் தம் கணவரைப் பார்த்து "நமக்குப் பரமசிவன் அருளால்புத்திரப்பேறு கிடைக்கும் என்பதற்கு ஐயமில்லை. ஆயினும் நாம் புத்திரகாமேஷ்டியாகம் செய்தால் நலமன்றோ?" என்று சொன்னாள்.

சிவகுருவும் தம் மனைவி புத்திரகாமேஷ்டியாகம் செய்யும்படி சொன்னதை நினைத்துக்கொண்டு அதை முடித்துவைக்க ஏற்பாடு செய்தார். உடனே யாகத்தைச் செய்ய ஆரம்பித்தார். ஆரியாம்பாளும் யாக தீக்ஷை பெற்ற தம் கணவருட னிருந்தாள். சிவ குருவும் அந்த யாகத்தைச் செவ்வனே செய்து முடித்தார்.

பின்பு ஒருநாள் அவர்கள் நித்திரைசெய்யும் வேளையில் பரமசிவன் ஒரு பிராமணராக வந்து ஆரியாம்பாளுக்குக் கனவில் தோன்றி, "பக்தி நிறைந்த மாது சிரோமணியே! உங்களுக்கு மூடர்களாயும், துஷ்டர்களாயும் வெகுகாலம் ஜீவித்திருப்பவர்களாயும் உள்ள அநேக புத்திரர்கள் வேண்டுமா? அல்லது ஞானமுள்ளவனையும் தெய்வபக்தியுள்ளவனையும் சிறிது காலம் ஜீவித்திருப்பவனையுமுள்ள ஒரே ஒரு புத்திரன் வேண்டுமா?" என்று கேட்டார்.

ஆரியாம்பாள், கனவில் அப்பிராமணரிடத்தில் "ஐயா! கல்வி அறிவும் நற்குணமுமுள்ள ஒரே புத்திரன் ஜனித்தால் எனக்கு அதிகமகிழ்ச்சியைத் தரும்; அவன் சிறிதுகாலம் ஜீவித்திருந்தாலும் போதும்" என்றாள். உடனே அப்பிராமணரும் மறைந்துவிட்டார். ஆரியாம்பாள் கண்விழித்துப் பார்த்தாள். ஒருவரும் அவள் கண்ணுக்குப் புலப்படவில்லை. உடனே இச்சங்கதியைத் தம் கணவருக்கு ஆரியாம்பாள் விவரமாகச் சொன்னாள். அவரும் "இது நல்ல சகுனம்தான். கடவுள் அருளிருந்தால் எல்லாம் நன்மையாக முடியும்" என்று சொன்னார். இருவரும் வழக்கம்போல் தங்கள் இல்லறதருமத்தைச் சிறிதும்

பிசகாமல் செவ்வனே சரிவர நடத்திக்கொண்டும் கடவுளைத் துதிசெய்துகொண்டும் வந்தார்கள்.

சிறிதுகாலஞ் சென்றபின் அவர்களுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அக்குழந்தை மிகவும் அழகுள்ளதாயு மிருந்தது. சிவகுருவும் அவர் மனைவியாரும் மிகவும் மகிழ்ந்து அந்த அருமையான குழந்தையை வெகு கவனத்துடன் வளர்த்து வந்தார்கள். அக் குழந்தைக்கு சங்கரன் என்ற பெயரையிட்டு நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாகப் பெற்றோர்கள் வளர்த்துவந்தார்கள்.

தங்கள் குழந்தைக்கு வயது ஐந்தானதும், பெற்றோர்கள் சங்கரருக்குக் கல்வி புகட்டிவந்தார்கள். சங்கரர் கல்வியில் விருத்தியடைந்து அறிவுடையவரானார். அவருக்குப் பூணூல் தரிக்கும் சடங்கு (உபநயனம்) வெகு விமரிசையாக நடத்தப்பட்டது.

பின்பு அவர் உபாத்தியாயர் வீட்டிலேயே தங்கிப் படித்துவந்தார். அக்கால வழக்கப்படி அவர் சில வீடுகளுக்குப் போய்ப் பிச்சை யெடுத்து வந்த அன்னத்தைத் தம் குருவின்வீட்டிலேயே வைத்துக் கொண்டு புசித்துவருவது வழக்கம். அவ்விதம் அவர் செய்துவருகையில் ஒருநாள் ஒரு வீட்டிற்குப் பிக்ஷைக்குப் போனார். அச்சமயம் அவ்வீட்டு எஜமானியிடத்தில் தின்பண்டங்களு மில்லை, சமையல்செய்ய அரிசியு மில்லை, அவள் மிகவும் ஏழை, என்னசெய்வாள்! ஐயோ! பிராமணப் பிள்ளைக்குப் பிச்சையிட நம்மிடத்தி லொன்றுமில்லையே யென்று வருந்தினாள். கடைசியாக, அந்த ஸ்திரீ தன் தோட்டத்திற்குச்

சென்று நெல்லிக் கனிகளை எடுத்துவந்து சங்கருக்கு அளித்தாள்.

சங்கரரும், அவளது தரித்திர நிலைமையைக் கண்டு, மிகவும் இரக்கங் கொண்டு கனகதாரா வென்ற ஸ்துதியைச் செய்து ஸ்ரீ மகாலக்ஷ்மியைத் துதித்தார். ஸ்ரீ மகாலக்ஷ்மிதேவியார் சங்கரரது துதிகளுக்கு இணங்கி, அவ் வீட்டில் பொன் நெல்லிக் கனிகள் ஏராளமாக வந்து குவியும்படி செய்தாள்.

உடனே சங்கரர் அந்த ஸ்திரீயினிடத்து விடைபெற்றுக்கொண்டு தம் குருவின் வீட்டிற்குச் சென்றார். இவ்விதம் அவர் பிச்சையெடுத்துக்கொண்டு தம் குருவினிடத்தில் வேதங்களையும், சாஸ்திரங்களையும், நன்றாகப் படித்துக்கொண்டு வந்தார். அவரது சிறந்த கல்வி அறிவு காலடியிலும், அதன் பக்கங்களிலுள்ள கிராமங்களிலும் உள்ளவர்களுக்குச் செவ்வனேபரவிற்று. மேலும் அவரது உதாரகுணம், நன்னடக்கை முதலியவைகளையும், ஜனங்கள் கண்டு களித்தார்கள்.

சங்கரரும் எல்லா சாஸ்திரங்களையும் படித்து அவைகளில் நிபுணரெனப் பேரெடுத்தார்.

இச்சமயத்தில் சிவகுரு இறந்துவிட்டார். அவர் தம் மகனுடைய கல்வித்திறமை, நற்குணம் முதலியவைகளைக் கண்டு களிக்கும்படியான பாக்கியம் பெறவில்லை. சங்கரருக்கு இச்சங்கதி தெரிந்தவுடன் அவர் செய்யவேண்டிய கடமைகளை (பிதுர்க்கடன்களை)ச் சிறிதும் தவறாமல் செய்து முடித்தார். தம் தாயாரிடத்திலேயே ஒரு வருஷகால மிருந்தார். அவர்

பின்பு குருவினிடத்திற்குப் போய்ப் படிக்க முடிய வில்லை. அவருக்குத் தாயாரிடத்திலும் தகப்பனாரிடத்திலும் அன்பும், மரியாதையும் உண்டு. ஆனது பற்றி அவர் தம் தாயாரது துக்கத்தை ஒரு விதமாய் நீக்கிக்கொண்டு ஒரு வருஷம் வரையில் வீட்டிலேயே யிருந்தார். ஒரு வருஷம் முடிந்தவுடன் தம் தகப்பனாருக்கு வருஷாப்திகம் என்ற சடங்கைச் (சிராரத்தம்) செய்தார்.

சங்கரரிடம் தூர்வாசர் என்ற ரிஷி ஒருநாள் வந்து சங்கருடைய நற்குணங்களையும், நற்செய்கைகளையும், தெய்வபக்தியையும், தாயாரிடத்துமரியாதை அன்பு முதலியவைகளையும் கண்டு களித்தார். பின்பு சங்கரருக்கு அந்த ரிஷி அட்டாங்க யோகத்தை உபதேசித்தார். அவரை ஆசீர்வதித்துவிட்டு தம தாச்சிரமம் சென்றார். சங்கரரும் அந்த ரிஷிக்குச் செய்ய வேண்டிய மரியாதையைச் செய்தார்.

சங்கரரைப்பற்றிப் பல கதைகள் வழங்கிவருகின்றன. காலடியில் இன்றைக்கும் வழங்கிவரும் ஒரு கதை மிகவும் முக்கியமானது. ஒருநாள் சங்கரருடைய தாயார் நதிக்குச் சென்று ஸ்நாநம்செய்து கடவுளைத் துதிசெய்துவிட்டு வரும்பொழுது வெயிலின் உஷ்ணத்தைத் தாங்க முடியவில்லையாம். இச் சங்கதியை சங்கரர் அறிந்து உடனே தாயாரிருக்கு மிடத்திற்குச் சென்று கடவுளைத் துதிசெய்தார். உடனே வெயிலின் உஷ்ணத்தால் தாயார் வருந்தாமலிருக்கும்படி கடவுள் செய்தாராம். மேலும் அங்குள்ள நதியைக் காலடியிலுள்ள ஸ்ரீகிருஷ்ணன் கோயிலண்டை ஓடும்படியும்

செய்தாராம். ஆரியாம்பாள் தினந்தோறும் இந் நதிக்கு எளிதில் சென்று ஸ்நானம், ஜபம், பூஜை முதலியவைகளைச் செய்துவந்தனளாம்.

சங்கரர் கல்வியில் விருத்தியடைந் திருப்பதையும் அவரது அறிவையும் கண்ட அவரது தாயார் அவருக்கு விவாஹம் செய்துவைக்கப் பல பெண்மணிகளின் ஜாதகங்களைத் தகுந்த ஜோசியர்களிடம் காட்டி வந்தாள். அப்போது அகஸ்தியர், உபமன்னியர், கௌதமர், ததீசி முதலிய ரிஷிகள் சங்கரரைப் பார்க்க வந்தார்களாம். சிறிதுநேரம் அவருடன் பேசியபின் அவருடைய ஞானம், நல்லொழுக்கம் முதலியவைகளைக் கண்டு மகிழ்ந்து, அகஸ்தியர் ஆரியாம்பாளிடத்தில் சங்கரருக்கு வயது அதிகமில்லை யென்பதைத் தெரிவித்தார். ரிஷிகள் எல்லோரும் சங்கரரை ஆசிர்வதித்துவிட்டுத் தங்களிருப்பிடம் சென்றார்கள்.

ஆரியாம்பாள் தமது புத்திரனுக்கு விவாஹம் செய்துவைக்க நினைத்த சங்கதி சங்கரருக்குத் தெரிந்தது. அவர் தம் தாயாரிடத்தில் "அம்மா! எனக்கு விவாஹம் செய்துகொள்ள விருப்பமில்லை. ஆனால் சந்நியாசியாயிருக்க விரும்புகிறேன். தயைகூர்ந்து உத்தரவளியுங்கள்" என்று கேட்டார்.

ஆரியாம்பாள், "மகனே! நீ சந்நியாசம் பெற இது சமயமல்ல. நான் உனக்கு விவாஹம் செய்து வைக்கவேண்டுமென்று விரும்புகிறேன். நீ இல்லறத்தில் சிறிதுகாலமிருந்து நான் இறந்தபின் எனக்குச் செய்யவேண்டிய கிரியைகளைச் செய்துவிட்டு நீ சந்நியாசம் பெறுவதுதான் தகுதி. இக் கலியுகத்தில்

சந்நியாச நிலைமை உனக்கு ஏற்றதல்ல'' என்று சொன்னாள்.

சங்கரர் பலவிதமான சமாதானங்களைச் சொன்னார். ஆரியாம்பாள் ஒன்றுக்கும் சம்மதிக்கவில்லை. ஆனதுபற்றி சங்கரர் தம் தாயார் சொல்லிய வண்ணம் நடக்கலானார். சங்கரர் தம் தாயாருக்குப் பணிவிடை செய்துகொண்டும், சாஸ்திரங்களைப் படித்துக்கொண்டும், கடவுளைத் துதி செய்துகொண்டுமிருந்தார்.

சங்கரருடைய தகப்பனார் இறந்து ஒரு வருஷமானதும் அவருக்குச் செய்யவேண்டிய வருஷச் சடங்கைச் சரிவரச் செய்து முடித்தாரன்றோ? சிலகாலம் சென்ற பின்பு சங்கரர் ஒருநாள் தம் தாயாருடன் சூர்ணிப்புழை என்ற நதிக்கு நீராடச் சென்றனர். அங்கு வந்ததும் சங்கரர் நதியில் இறங்கினார். உடனே ஒரு முதலை அவரது காலைக் கௌவிக்கொண்டது. மனோதிடமுள்ள சங்கரர் "அம்மா! என் காலை முதலையொன்று கௌவ்விக்கொண்டிருக்கிறது. நான் இனி பிழைப்பது அருமை. இப்பொழுது எனக்கு அநியாயமாய் துர்மரணம் நேரிட்டிருக்கிறதே! இத்தோஷம் நீங்க தாங்கள் தயைசெய்து இச் சமயத்தில் நான் சந்நியாசம்பெற உத்தரவளியுங்கள்'' என்று கேட்டார்.

ஆரியாம்பாள் தன் மகனைப் பார்த்து மிகவும் வருந்துகையில், அங்கிருந்த பிராமணர்கள் வேதமந்திரத்தைச் சொல்லிக் கடவுளைத் துதிசெய்யத் தொடங்கினர். அம்மந்திர சக்தியால் சங்கரருடைய ஆபத்து நீங்குமென்று வேதியர் நினைத்தார்கள். உடனே, "ஓ ஆரியாம்பாள்! உம்முடைய மகன் சந்நியாசம்

பெற்றுக்கொண்டால் இன்னும் சிறிதுகாலம் ஜீவித்திருப்பான்'' என்ற அசரீரி வாக்குண்டானது. அங்கு ஜபம் செய்துகொண்டிருந்த வேதியரனைவரும் ஆச்சரியமுற்றனர். ஆரியாம்பாள் இவ்வித ஆபத்துள்ள சமயத்தில் சிறிதும் தயங்காமல் "என் பிரியமுள்ள அருமைப்பிள்ளாய்! அநியாயமாய்த் துர்மரண மடையாமல் சந்நியாசம் கொண்டாவது பிழைத்திரு'' என்றாள்.

சங்கரர் உடனே தாயாரின் உத்தரவு பெற்று, நான் "சந்நியாசியே'' யென்று சொல்லிக்கொண்டு தண்ணீரில் மூழ்கினார். இவ்விதம் சங்கரர் செய்தவுடன் முதலை அவர் காலை விட்டுவிட்டதாம். உடனே கரையேறி சந்நியாசி விரதம் பூண்டார். தம் தாயாரை நமஸ்கரித்துவிட்டு, "அம்மா! எனக்கு உத்தரவு கொடுங்கள்'' என்றார்.

தாயார், "மகனே! நீ இந்த ஊரிலேயே யிரு, நான் உன்னைப் பார்த்துக்கொண்டாகிலு மிருக்கிறேன். எனக்கோ ஒருவரும் துணையில்லை. நான் இறந்தால் எனக்கு நீதானே கர்மம் (உத்தரகிரியை) செய்யவேண்டும். நான் இறக்குமளவில் இங்கிரு; பின்பு நீ எவ்விடத்திற்காவது போகலாம்'' என்று சொன்னாள்.

சங்கரர், "அம்மா! சந்நியாசிகள் ஒரே யிடத்தில் தங்கியிருக்கக் கூடாது. பற்பல விடங்களுக்குப் போய்க்கொண் டிருக்கவேண்டும். நான் தாங்கள் இறக்கும் தறுவாயில் தங்களண்டை வந்து விடுகிறேன். தாங்கள் இறந்தவுடன் தங்களுக்குச் செய்யவேண்டிய சடங்குகளையும் செவ்வனே செய்து முடிக்கிறேன்.

ஒன்றுக்கும் பயப்படவேண்டாம்'' என்று பதில் உரைத்தார்.

ஆரியாம்பாள் புத்தி நுட்பமுள்ளவளாகையால் தன் குமாரன் சொற்படி நடக்க இசைந்தாள். ஆகவே, சங்கரர் தமது உறவினர்களை வரவழைத்து அவர்களுக்குத் தமது ஆஸ்திகளையெல்லாம் கொடுத்தார். தம் தாயாரைப் பிரியமாய்க் காப்பாற்றி வரும்படியும் கேட்டார். அவர்களும் அவ்விதமே செய்துவருவதாக வாக்களித்தார்கள்.

உடனே சங்கரர் தம் தாயாரிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு காலடி என்ற தமது சொந்தக் கிராமத்தைவிட்டு ஒரு குருவைத் தேடப் புறப்பட்டார். அக்காலத்தில் இந்தியாவில் ஒவ்வொரு முக்கியமான ராஜ்யத்திலும் கலாசாலைக ளிருந்தன. அக் கலாசாலைகளில் கல்வியிற் சிறந்த வித்துவான்க ளிருந்தார்கள். அவர்களில் சிலர் தங்கள் மனைவி மக்களுடன் இல்லற வாழ்க்கையை நடத்தி வந்தனர். சிலர் சந்நியாசம் பூண்டு சீடர்களுக்குக் கல்வி புகட்டி வந்தார்கள்.

சங்கரர் மேற்குக் கரையிலுள்ள கோகர்ணம் என்ற புராதன நகரத்திற்கு வந்தார். அங்கு தம்முடன் காலடியில் முன்பு படித்துவந்த விஷ்ணுசர்மனைக் கண்டு களித்தார். விஷ்ணு சர்மன் சங்கரருடன் கூடப் புறப்பட்டார். இருவரும் காடு, வனாந்தரம், நதி, ஏரி, மலை முதலியவைகளுள்ள தேசங்களைக் கடந்து நர்மதா நதிக்கரைக்கு வந்தார்கள். அங்கு ஓர் ஆசிரமத்தில் கோவிந்தயோகி என்ற மகான் தம் குமாரனாகிய பர்த்ருஹரிக்கும் இன்னும் சில மாணாக்கர்களுக்

கும் வேதாந்த சாஸ்திரம் முதலியவைகளைப் போதித்து வந்தார். சங்கரர் கோவிந்தயோகியிடம் சென்று வணங்கினார். கோவிந்தயோகி, "அப்பா! பிள்ளாய்! நீ யார்? எந்த ஊர்? இங்கு எதற்காக வந்தாய்?" என்று சங்கரரைக் கேட்டார்.

சங்கரர், "ஐயா! நான் கேரளதேசத்தில் காலடியைச் சேர்ந்தவன். என் தகப்பனாரின் பெயர் சிவகுரு. அவர் இறந்துவிட்டார். என் தாயார் இதுகாறும் என்னை வளர்த்துவந்தாள். எனது தாயார் உத்தரவு பெற்று ஆபத் சந்நியாசம் பெற்றுக்கொண்டேன். நான் சாஸ்திரங்களைக் கற்றுவந்தேன். அவைகளில் எனக்குப் பயிற்சியுண்டு. இன்னும் வேதாந்தம் முதலியவைகளைக் கற்க விரும்புகிறேன். நான் தங்களிடத்தில் சிஷ்யனாயிருக்க இங்கு வந்திருக்கிறேன். எனக்கு சந்நியாசிகளுக்குரிய சடங்கு முதலியவைகளைச் செய்துவைக்குமாறு தங்களை வேண்டிக் கொள்ளுகின்றேன்" என்று பதிலுரைத்தார். மேலும் முதலையின் வாயில் தம் கால் அகப்பட்டதையும் பின்பு உயிர் தப்பிய விஷயத்தையும் அவருக்கு விவரித்துச் சொன்னார்.

கோவிந்தயோகி அச் சிறுவனைக் கண்டு அவன் சொன்ன வார்த்தைகளைக் கேட்டு மகிழ்ந்தார். உடனே, அவர் "அப்பா! குழந்தாய், உன்னை என் மாணாக்கர்களி லொருவனாக வைத்துக்கொள்ளுகிறேன், இந் நதியில் ஸ்நானம் செய்துவா" என்று சொன்னார்.

சங்கரரும் தமக்கு குரு கிடைத்ததைக் கண்டு மிகவும் சந்தோஷங்கொண்டு, நதிக்குச் சென்று கடவு

ளைத் துதிசெய்துகொண்டு, அதில் ஸ்நாநம் செய்தார். பின்பு சங்கரர் கோவிந்தயோகியார் வீற்றிருக்குமிடத்திற்கு வந்து அவர் முன் நின்றார்.

கோவிந்தயோகியார் சாஸ்திர முறைப்படி சங்கரருக்கு சந்நியாசத்தை யளித்தார். துறவியின் தருமத்தைப் போதித்தார். பின்பு வேதாந்தம், உபநிஷத் முதலியவைகளின் கருத்துக்களைச் செவ்வனே போதித்து வந்தார். யோகம் செய்யின் அதற்குரிய சூக்ஷ்ம மார்க்கத்தையும் போதித்துவந்தார்.

சங்கரர் புத்திநுட்பமுடையவ ராதலால் தம் குரு போதித்தவைகளை யெல்லாம் செவ்வனே கற்றுக் கொண்டார். சங்கரருக்குத் தம் குருவினிடத்தில் அன்பும் மரியாதையும் அதிகரித்தன. மேலும் சங்கரர் அவர் சொற்படி நடந்துவந்தமையால் தான் கல்வியில் தேர்ச்சியுடையவரானார். குருவும் தம் மாணாக்கராகிய சங்கரருடைய நுண்ணறிவையும் குரு பக்தியையும் கண்டு களித்தார்.

சங்கரருக்குக் கல்விப் பயிற்சி முடிவுபெற்றதை யறிந்த கோவிந்தயோகியார் "அப்பா! சங்கரா! உனக்கு ஞானமுண்டாய்விட்டது. நீ இனி காசிக்குப் போய் அங்குள்ள ஜனங்களுக்கு வேதாந்தத்தில் ஞானமுண்டாகும்படி செய்யக்கடவாய். ஆனால் என் சிறந்த குருவாகிய ஸ்ரீ கௌடபாதரது வேதாந்தக் கொள்கைகள் தான் உனக்கும் செவ்வனே விளங்கிற்று. அம்மகான் பதரிகாச்ரமத்தில் வசிக்கிறார். அவருக்கு வயது 120 இருக்கும். அவர் யோகம் செய்து வருகிறார்" என்று சொன்னார்.

சங்கரர் "குருசிரேஷ்டரே! தங்களது குருவைக் கண்டு அவரை வணங்கவும் விரும்புகிறேன். ஆகையால் என்னை அவரிடம் அழைத்துக்கொண்டுபோகும்படி தங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" என்று சொன்னார்.

கோவிந்தயோகியாரும் தமது சீடனது விருப்பத்திற் கிணங்கி சங்கருடன் புறப்பட்டார். ஹிமாலய பர்வதத்தில் பதரிகாச்ரம முளது. அங்கு இவ்விருவரும் சென்றார்கள். அச்சமயத்தில் கௌடபாதர் யோகநிஷ்டை யில்லாமலிருந்தது, இவர்களது பாக்கியமேயாம். சங்கரர் அவரைக் கண்டவுடன் அவரது பாதங்களைப் பிடித்துக்கொண்டு சாஷ்டாங்கமாக நமஸ்கரித்தார்.

கோவிந்தயோகியாரும் தம் குருவை வணங்கிய பின், சங்கரர் தம் சீடன் என்பதைத் தெரிவித்தார். அவரும் வெகுவாய் மகிழ்ந்து, சங்கரரைத் தம்மிடத்தில் சிறிதுகாலம் வைத்துக்கொண்டு தமக்குத் தெரிந்தவைகளையெல்லாம் அவருக்குப் போதித்து வந்தார்.

சங்கரர் பற்பல கடினமான தத்துவ சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்தார். சங்கரர் அநேக புத்தகங்களை எழுதினார். அவைகளில் மண்டூக்கிய உபநிஷத்தின் உரையும் ஒன்று. அவ்வுரையைக்கண்டு வியப்புற்று, "சங்கரா! சுத்தமான ஞானமே மேலானதென்ற அத்வைதத்தை நிலைநிறுத்து. அதன் சம்பந்தமாயுள்ள வேதாந்த நூல்களுக்கு உரை இம்மாதிரி எழுது" என்று கௌடபாதர் சொன்னார்.

சங்கரரும் அவரது கட்டளைப்படி அநேக நூல்களுக்கும் தசோபநிஷத்துகளுக்கும் உரை எழுதினார்.

அவ்வுரைகள் இப்பொழுதும் சிறந்தவையென வித்து வான்களால் புகழப்பட்டு வருகின்றன. அவர் கடைசி யாக வேதாந்த சூத்திரங்களுக்கும், பிரம்மசூத்திரத் துக்கும் உரை எழுதினார். அவ் வுரைகளை யாவரும் எளிதில் அறிந்துகொள்ளலாம். அவரது ஞானமும், ஆழ்ந்த யோசனையும், தைரியமும், அவ்வுரைகளால் நன்கு விளங்கும். அவருரையே மிகவும் சிறந்ததென யாவராலும் கருதப்படுகிறது.

கௌடபாதர் சங்கருடைய விடாமுயற்சியைக் கண்டு மிகவும் மகிழ்ந்தார். உடனே அவர் கைலாசத் தில் தபசு புரிந்துவரும் தமது பரம குருவுக்கு அவ் வுரைகளைக் காட்ட சங்கரரை அழைத்துச் சென்றார்.

இருவரும் ஆங்கு சென்றவுடன் கௌடபாதர் தம் குருவாகிய பாதராயணரையும் பரமகுருவாகிய சுகரையும் கண்டு வணங்கினார். சங்கரரும் முறையே அவர்களை வணங்கித் தமது உரைகளை (பாஷ்யங்களை)க் காண்பித்தார்.

அவர்கள் அவைகளெல்லாம் உண்மையான உரைகளென்று முகமலர்ச்சியுடன் சொல்லி சங்கரரை ஆசீர்வதித்தார்கள். "சங்கரா! காசி க்ஷேத்திரம் மிக வும் சிறந்த புண்ணியஸ்தலம். அங்கு அநேக கலா சாலைகளும், வித்துவான்களு மிருக்கிறார்கள். நீ ஆங்கு சென்று ஜனங்களுக்கு வேதாந்த உண்மையைப் போதி" என்று சொன்னார்கள்.

உடனே அவர்கள் சங்கரர் கண்களுக்குப் புலப் படாமல் மறைந்து விட்டார்கள். கௌடபாதரும் மறைந்துவிட்டார். சங்கரர் அந்த ப்ரதேசத்தில் தனி மையாக என்ன செய்வார்? சிறிதுநேரம் திகைத்து



இமயமலையின் காட்சி

நின்றார். கௌதமபுத்தர் எவ்விதம் போதிவிருக்ஷத்தின்கீழ் தனிமையாக உட்கார்ந்துகொண்டு இருந்தாரோ அவ்விதமே சங்கரரும் இருக்கவேண்டியதாயிற்று.

அச்சமயத்தில் சங்கரர்முன் பரமசிவன் தோன்றி "அப்பா! சங்கரா! இந்நதியில் முழுகிவிட்டுவா" என்றார். சங்கரர் அவ்விதமே செய்துவந்ததும், "நீ இனி அத்யாத்மசந்நியாசி. இதோ இருக்கிற இந்த காவி வஸ்திரத்தைத் தரித்துக்கொள். ஒரு கையில் கமண்டலத்தை (தண்ணீர் பாத்திரம்) வைத்துக்கொள்; மற்றொரு கையில் ஒரு கோலை (தண்டம்) வைத்துக்கொள். இவ் வுலகசிந்தை உன் மனதில் இனி உதிக்காது" என்று சொன்னார்.

சங்கரர் அவரைத் துதித்தார். உடனே பரமசிவன் அவருக்கு உபநிஷத்துக்களிலுள்ள மகாவாக்கியங்களைப் போதித்தார். அவைதான் மேலான ஞானமென்று சொல்லி ஒரு புஸ்தகத்தையும் கொடுத்து மறைந்துவிட்டார்.

சங்கரர் அப் புஸ்தகத்தைப் பார்த்தார். அது, தாம் பிரம்ம சூத்திரத்திற்கு எழுதிய பாஷியமாயிருந்தது. சங்கரர் உடனே மறுபடியும் பரமசிவனைத் துதிசெய்யவே, அவர் சங்கரர்முன் தோன்றி, சங்கரரை ஆசீர்வதித்து, "சங்கரா! நீ காசிக்ஷேத்திரத்திற்குப்போய் அத்வைத வேதாந்த ஞானத்தை யாவருக்கும் புகட்டுவாயாக" என்று கட்டளையிட்டபின் மறைந்துவிட்டார்.

உடனே சங்கரர் கைலாயபர்வதத்தை விட்டுப் புறப்பட்டு அதன் அடியிலுள்ள பதரிகாச்சிரமத்திற்கு

வந்தார். இங்கு அவர் வந்தவுடன் தமது பழைய நண்பனாகிய விஷ்ணுசர்மனைக் கண்டார். விஷ்ணுசர்மனுக்கு நடந்த சங்கதிகளை யெல்லாம் விவரித்துச் சொன்னார்.

விஷ்ணுசர்மன் யாவற்றையும் கேட்டு மிகவும் மகிழ்ந்து தன்னை ஒரு சீடனாக ஏற்றுக்கொள்ளும்படியும் தனக்கு சந்நியாசம் பெற விருப்பமென்றும் சொன்னார். சங்கரர் விஷ்ணுசர்மாவின் வேண்டுகோளுக் கிணங்கி அவரிஷ்டப்படி செய்தார். ஏனெனில், சங்கரரிடத்தில் விஷ்ணுசர்மாவுக்கு அன்புண்டு. அவ்வன்பு இப்பொழுது அதிகரித்தது. சங்கரருக்கும் விஷ்ணுசர்மாவின் நற்குணம், நல்நடத்தை, தெய்வ பக்தி, மன உறுதி முதலியவைகளெல்லாம் தெரியும். ஆனதுபற்றித்தான் அவரைத் தமது சீடனாக ஏற்றுக் கொண்டார். அவருக்கு சித்சுகாசாரியார் எனப் பெயரிட்டார். சந்நியாசம் பெறவும் ஏற்பாடுசெய்து, அவரை ஒரு சந்நியாசியாகவும் சங்கரர் செய்தார்.

பின்பு சங்கரர் தமது பழைய நண்பனும் புதிய சீடனுமாகிய சித்சுகாசாரியாருடன் காசிக்குப் போக எண்ணினார். அச்சமயத்தில் அவருடைய உறவினர்களில் ஒருவராகிய அக்னிசர்மன் என்பவர் ஆரியாம்பாள் கொடுத்த பொன் நாணயப்பையையும் விலையுயர்ந்த ரத்னங்க ளடங்கிய பையையும் சங்கரரிடம் திடீரென்று கொண்டுவந்து கொடுத்தார். அவர் "ஐயா! தங்களது அருமைத் தாயார் காலடியில் வியாதியால் வருந்துகிறாள். தங்களைப் பார்க்க வேண்டுமென்று மிக்க ஆவலா யிருக்கிறாள். இப்பொன் நாணயம், விலை யுயர்ந்த கற்கள் முதலியவைகளைத்

தர்மம் செய்யும்படி தங்களிடத்தில் கொடுக்கவும் சொன்னாள் " என்றார்.

சங்கரர் இச்சங்கதியைக் கேட்டவுடன் காசிக்குப் போவதை நிறுத்தவேண்டியதாயிற்று. அவர் உலகப்பற்றை நீக்கி யிருந்தபோதிலும், தம் அருமைத் தாயாரின்மீது பிரியமும் மரியாதையும் அவரிடத்தில் குடிகொண்டிருந்தன. ஆனதுபற்றி உடனே அவர் தம் தாயாரைப் பார்க்க விரும்பினார் தம் தாயார் அனுப்பிய பொன், கற்கள் முதலியவைகளைப் பதரி காச்ரமத்திலுள்ள பூர்வகாலத்து விஷ்ணுவாலயத்தை மராமத்து செய்வதற்கும், சிற்சில விடங்களைப் புதியதாகக் கட்டவும் செலவழித்தார் நாராயணமூர்த்திக்குப் பூசை செய்ய அக்னி சர்மனை நியமித்தார். அவரும் நம்பூத்திரி பிராமணர்தான். இப்பொழுதும் நம்பூத்திரி பிராமணர்கள் பதரி நாதருக்குப் பூசை செய்து வருகிறார்கள். அவர்கள் சங்கருடைய உறவினராகிய அக்னிசர்மன் வம்சத்தைச் சேர்ந்தவராம்.

பேர்பெற்ற பதரிநாத் ஆலயம் இமயமலையிலிருக்கிறது. இந்துக்களெல்லோரும் இவ்வாலயத்திற்குப் போய் வருகிறார்கள். ஏனெனில் இது புண்ணிய க்ஷேத்திரங்களில் மிகவும் முக்கியமானது. சங்கரரால் அளிக்கப்பட்ட பொன், வெள்ளிப் பாத்திரங்களில் நைவேத்தியம் (ஆகாரம்) வைத்து சுவாமிக்குத் தினந்தோறும் பூசைசெய்யப்பட்டு வருகிறது.

இவ்வாலயத்திற்குக் கீழ்ப்புறத்தில் சங்கரபுஷ்கரணி என்ற குளமிருக்கிறதாம். அங்குள்ள தம் குருவும், ரிஷிகள் முதலியோரும் குளிர்காலத்தில் வெகு கஷ்டத்துடன் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நாநம்

செய்து வருவது வழக்கம். அவர்களது கஷ்டத்தை நீக்கும்பொருட்டு சங்கரர் சூடான ஜலம் கிடைக்கக் கூடிய விடத்தைக் கண்டுபிடித்து அதைப் பெரியதாக வெட்டிவைத்தாராம். இப்பொழுதும் லக்ஷக் கணக்கான ஜனங்கள் பதரிநாதாலயத்துக்குப் போய் அக் குளத்தில் ஸ்நாநம்செய்தும் வருகிறார்களாம். இச் சம்பவம் சங்கரர் காலடிக்குப் போகும்பொழுது நடந்ததாகத் தெரிகிறது.

சங்கரர் தமது தாயாரைப் பார்க்க ஆவலுடன் துரிதமாய்க் காடு மலை நதி முதலியவைகளைக் கடந்து காலடிக்கு வந்தார். தமது தாயாரைக் கண்டு களித்தார். தம் தாயாருக்கு சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்தார். ஆரியாம்பாள் தன் குமாரன் முன் சொல்லியபடி தவறாமல் வந்ததைக் குறித்து மிகவும் சந்தோஷ மடைந்தாள்.

அவருடைய தாயாராகிய ஆரியாம்பாள் மிகவும் வியாதியால் வருந்தியபடியால் மேல் உலகிற்குப்போக வேண்டுமென்று நினைத்தாள். ஒருநாள் "அப்பா! சங்கரா! வேதாந்தவிஷயமாக ஏதாவது சொல் கேட்கிறேன்" என்றாள். சங்கரர் அத்விதமே வேதாந்தத்தில் சிலவற்றைச் சொன்னார். "என் மகனே! நீ சொல்வதொன்றும் எனக்கு விளங்கவில்லை; ஆகையால் நான் எளிதில் தெரிந்துகொள்ளும்படி கடவுளைப் பற்றி வேறேதாவது சொல்" என்றாள்.

சங்கரர் அவ்விதமே தாம் பரமசிவனைப் பற்றி இயற்றிய தோத்திரங்களைச் சொன்னார். பயங்கரமான தோற்றத்தையுடைய அத் தூதர்களைப் பார்க்க ஆரியாம்பாளுக்கு மனம் வரவில்லை. அவர்களுடன் சிவ

லோகத்திற்கும் போக விரும்பவில்லை. ஆனதுபற்றி "என் பிள்ளாய்! மகாவிஷ்ணுவாகிய ஸ்ரீ கிருஷ்ண பாகவானைப் பற்றித் துதிசெய்" என்றாள். சங்கரர் அவ்விதமே ஸ்ரீ கிருஷ்ணபகவானைக் குறித்து (கிருஷ்ணாஷ்டகம் 8 சுலோகமுடைய துதி) துதிசெய்தார். உடனே மகாவிஷ்ணுவின் தூதர்கள் தோன்றினார்கள். ஆரியாம்பாள் இவர்களைக் கண்டவுடன் சந்தோஷமடைந்தாள். இவர்களுடன் விஷ்ணுலோகத்திற்குச் சென்றாள். அதாவது ஆரியாம்பாள் உயிர் துறந்தாள். அவளுக்கு மோக்ஷம் கிடைத்தது.

தம் அருமைத் தாயார் இறந்தவுடன் அவளுக்குச் செய்யவேண்டிய உத்தரக்கிரியை செய்ய ஏற்பாடு செய்தார். சங்கரர் சந்நியாசியாகையால் சடங்கொன்றும் செய்யக் கூடாதென அவ்வூரார் சொன்னார்கள். அது சாஸ்திரத்திற்கும் வழக்கத்திற்கும் விரோதமென்றும் சொன்னார்கள்

சங்கரரோ தம் தாயாரிடத்தில் உத்தரவு பெற்று சந்நியாசம் பெற்றுக்கொண்டபொழுது "அம்மா! நான் தங்களுக்கு உத்தரக்கிரியை செய்கிறேன்" என்று வாக்களித்தார்களல்லவா? அதன்படி நடக்க வேண்டுமென்றும், ஸ்காந்தபுராணத்தில் "சந்நியாசியால் தாய் எவ்விதத்திலும் வணங்குவதற்கு உரியள்" என்றிருப்பதையும் அவர்களுக்குச் சொன்னார்.

அவர்கள் அவைகளைச் சிறிதும் காதுகொடுத்துக் கேட்கவில்லை. சங்கரர் தாயாரைத் தெய்வமாக எண்ணி வந்தார். தாய் வார்த்தைக்கு எதிரிடையாகப் பதிலளிக்கமாட்டார். தாய் சொல்லியதைச் செய்துவந்தார். தாயிடத்தில் அன்பும் மரியாதையும் சங்கருக்கு

மிகுதியா யுண்டு. ஆனதுபற்றி தாய்க்குச் செய்ய வேண்டிய தம் கடமையைத் தாம் சந்நியாசியாயிருந்த போதிலும் செய்யலானார்.

அக்காலத்தில் அவ்வூராராகிய நம்பூத்திரி பிராமணர்கள் சங்கரருக்கு உதவிபுரிய மாட்டோமென்றார்கள். சங்கரர் எவ்வளவோ சமாதானஞ் சொல்லி அவர்களைத் தமக்கு இச் சமயத்தில் உதவிபுரியும்படி வேண்டிக்கொண்டார். பிடிவாதமுள்ள அவர்கள் பிணத்தை எடுத்துக்கொண்டுபோவதற்குக்கூட உதவி புரிய முன்வரவில்லை. நெருப்பும் கொடுக்கவில்லை.

அவர்களது கல்நெஞ்சை எவ்விதத்திலும் மாற்ற முடியாதவராய்க் கடவுளையே நம்பிக்கொண்டு தாமே ஒருவருடைய உதவியின்றி பிணத்தைத் தூக்கித் தமது வீட்டின் பின்பக்கத்தில் வைத்துத் தகனம் செய்யத் தீர்மானம் செய்துகொண்டார். அங்குள்ள உலர்ந்த குச்சிகளையெல்லாம் திரட்டி அடுக்கிவைத்து அதன்மீது தாயாரை வைத்தார். வேதமந்திரங்களைச் சொல்லி நெருப்புவைத்துத் தம் தாயாரைத் தகனம் செய்தார்.

பரம்பரையாக பின்வரும் கதை வழங்கிவருகிறது: பிணத்தைத்தூக்க முடியாமையால் சங்கரர் அதைத் துண்டம்செய்து கொண்டுவந்து ஓரிடத்தில் வைத்து, விறகு கிடைக்காமையால் வாழை மட்டைகளைப் பிணத்தின்மீது அடுக்கித் தமது மந்திரசக்தியால் தீ மூட்டி அதை எரித்தாராம். அவ்விதம் தம் தாயாரைத் தகனம்செய்த இடம் இப்பொழுதும் காலடியில் புதியதாக ஸ்தாப்பிக்கப்பட்ட ஸ்ரீமத் ஆதிசங்கராசாரியார் கோயிலி லிருக்கிறது. வியாதி யுள்ளவர்கள் அவ்விடத்திலுள்ள மண்ணை எடுத்துக்கொண்டுபோய்

நெற்றியில் இட்டுக்கொள்ளுகிறார்கள். அவ்விதம் செய்யின் வியாதி நீங்கும் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கிறது.

மேலும் சங்கரர் தம் தாயார் தேகத்தைத் துண்டு துண்டாய்ச் சிதைத்தபடியால், இப்பொழுதும் அத்தேசத்திலுள்ளோர் பிணத்தின் சரீரத்தை அவ்விதம் செய்யாமலிருந்தபோதிலும், அதில் வெட்டுக்காயம் செய்தபின்தான் பிணத்தைத் தகனம்செய்து வருகிறார்கள் எனச் சொல்லப்படுகிறது.

சங்கரர் தம் தாயாருக்குக் கருமம் செய்து முடித்தபின் சநந்தனர் காலடிக்கு வந்தார். இவர் சங்கரரைக் கண்டு, "சுவாமிகளே! தங்கள் குருவாகிய ஸ்ரீகோவிந்த பகவத்பாதர் பதரிகாச்ரமத்தை விட்டு * அமரகாந்தத்திலுள் ஏதமது ஆச்ரமத்திற்கு வந்திருக்கிறார். அவர் வியாதியாயிருக்கிறார். அவர் உயிர் விடுவதற்குமுன் தங்களைப் பார்க்கவேண்டும் என்று விரும்புகிறார். ஐயா, நான் தங்களுடைய மாணாக்கர்களில் ஒருவனாயிருக்க விரும்புகிறேன். என்னைத் தயைகூர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று சொன்னார்.

சங்கரரும் சநந்தனரைத் தம் மாணாக்கர்களில் ஒருவராக வைத்துக்கொள்ளச் சம்மதித்தார். உடனே சித்

---

* அமரகாந்தா என்றும் அமரேசவரம் என்றும் வழங்கி வந்தது. இப்பொழுது இதன் பெயர் அமரேஷ்வர். இது ஒரு புண்ணிய ஸ்தலம். இதற்கு யாத்திரிகர் செல்வதுண்டு. இது ராஜபுதனம் மால்வா ரயில்பாதையிலுள்ள மோர்டக்கால் ஸ்டேஷனிலிருந்து 7-மைல் தூரத்தில் நர்மதா நதியின் தென்கரையிலுள்ளது.

சுகாசாரியாரையும், சநந்தனரையும் இட்டுக்கொண்டு தம் குருவிருக்கும் ஆச்ரமத்திற்குப் போனார். சங்கரர் கோவிந்த பகவத்பாத ரிருக்கும் ஆச்ரமத்திற்கு வந்ததும், தம் குருவைப் பார்க்கச் சென்றார். அவர் வியாதியால் வருந்திக்கொண்டு இருப்பதையும் அவர் பக்கத்தில் அவர் குமாரராகிய பர்த்ருஹரியும் இன்னும் அநேக மாணாக்கர்களு மிருப்பதையும் கண்டார். தம் குருவுக்கு ஞாபகசக்தி யில்லையென்பதை அறிந்து சங்கரர் மிகவும் வருந்தினர். சிறிதுநேரம் சென்ற பின்பு சங்கரர் இனிய குரலுடன் பேசினாராம்.

அப்பொழுது அவருடைய குருவுக்கு ஞாபகசக்தி யுண்டாயிற்று. அவர் உடனே எழுந்து உட்கார்ந்து சங்கரரைத் தழுவிக்கொண்டு, "அப்பா! சங்கரா! உன்னைக் கண்டதினால் என் மனம் திருப்தியடைந்தது. நீ இனி தாமதம் செய்யாமல் அத்வைத வேதாந்தத்தை உலகத்தாருக்குப் போதிக்க ஒவ்வொரு ஊருக்கும் செல்லுவாயாக. ஓ சீடர்களே! நீங்களும் சங்கரருடன் செல்லுங்கள். உங்களுக்கு இனி சங்கரர் தான் குரு" என்று சொல்லியபின் மறுபடியும் சங்கரருக்கு 'ஜய முண்டாகக் கடவது' என ஆசீர்வதித்துவிட்டுப் பரலோகமடைந்தார்.

பின்பு சங்கரர் தம் சிஷ்யர்களுடன் ஸ்ரீகாசிப் பட்டணத்திற்கு வந்தார், அங்கு ஓர் ஆச்ரமத்தில் தம் சிஷ்யர்களுடன் தங்கினர். காசி முக்கியமான புராதன பட்டணம். அது 'அவ்விதமே பாரதம், ராமாயணம் முதலியவைகள் நடந்த காலமுதற் கொண்டு கருதப்பட்டு வருகிறது. அங்கு தினம் சங்கரர் கங்கைக்கரையிலும் தமது ஆச்ரமத்திலும் அநேகருக்கு அத்வைத வேதாந்த தத்துவத்தை உப

தேசித்து வந்தார். சிற்சில சமயங்களில் உபந்நியாசமும் செய்துவந்நார். அவர் ஆழ்ந்த புத்தியுடையவர். எல்லா நூல்களையும் படித்தவர். பேசுவதில் சமர்த்தர். வாதம் செய்தால் நியாயமாயும் சாஸ்திர விரோதமில்லாமலும் செய்வார். அவைகளுக்கு நேர் விரோதமாகச் செய்யார். உபதேசித்தாலும் சரி, பிரசங்கம் செய்தாலும் சரி, யாவரும் அவர் சொல்வதை எளிதில் அறிந்துகொள்வார்கள்.

இவ்வித குணங்களிருந்தமையால் அவருக்கு அநேகர் சிஷ்யர்களானார்கள், அவரது கொள்கையைக் கைக்கொண்டார்கள். அவரது புத்தி சாதுர்யத்தைப் பற்றிச் சிறப்பாக அநேகர் கொண்டாடினார்கள். அவரது நூல்களின் சிறப்பும், அவரது பெருமையும் இமயமலை முதல் கன்னியாகுமரிவரையிலுமுள்ள தேசங்களில் வசிக்கும் ஜனங்களுக்கு எட்டிற்று. அநேக வித்வான்கள் பற்பல சமயங்களில் அவருடன் தர்க்கம்செய்து அவரை ஜயிக்கமுடியாமல் அவருக்குச் சீடர்களானார்கள். சீடர்கள் அத்துவைததத்துவத்தைப் பரவச்செய்ப முயன்று வந்தார்கள்.

இவ்விதம் அவரும் அவருடைய மாணாக்கர்களும் பிரசங்கம்செய்துவந்தமையால் அநேகர் அத்துவைத உண்மையை யறியலானார்கள். மேலும் அவர் சூதசம்ஹிதை, பிரம்மசூத்திரம் முதலியவைகளுக்கு எழுதிய உரைகளையும் தம் மாணாக்கர்களுக்குப் போதித்து வந்தார். அவர்கள் அவ்வுரைகளின் கருத்துக்களை நன்றாக அறிந்துகொண்டு, பாமர ஜனங்களுக்கும், ராஜாக்களுக்கும் மற்றவர்களுக்கும் போதித்து வந்தார்கள். அவரவர்கள் தங்கள் இஷ்டதெய்வத்தைப் பூசிக்கலாமென்று சொல்லிவந்தார்கள். தருமத்தைக்

கைவிடக்கூடாது என்றும், உலகப் பற்றை நீக்கி மேலான நோக்கத்தை யடையும் வழியை ஒவ்வொரு வரும் தேடவேண்டும் என்றும் போதித்து வந்தார்கள்.

சங்கரர் ஹரித்வாரம், பிரம்மகபாலம், பாடலீ புரம், இந்திரபிரஸ்தம், அயோத்திய, விஷ்ணுபாதம், நவத்வீபம், சித்திரகூடம் முதலிய புண்ணிய ஸ்தலங் களுக்குச் சென்றார். அங்குள்ள வித்துவான்கள் இவ ரது கல்வித் திறமையையும், ஞான ஒளியையும் கேட்டு இவருடன் அத்துவைத தத்துவத்திற்கும் தங்கள் கொள்கைக்குமுள்ள வித்தியாசங்களைப் பற்றி வாதாடி னார்கள். அவர்களுக்கு நல்லறிவுண்டாகும்படி அவர் களுடன் சங்கரர் தர்க்கம் செய்தார். அவ்விதம் செய்யவே, அவர்க ளெல்லோரும் சங்கரருக்குச் சிஷ்யர்களானார்கள். அவர்களும் அத்துவைத மதத் தைப் பரவச்செய்ய முயன்று வந்தார்கள்.

சங்கரர் சிறிதுகாலம் காசியிலும், சிறிதுகாலம் பதரிகாச்ரமத்திலும் வசித்துவந்தார். சமயம்நேர்ந்த காலத்தில் மேற்சொல்லிய புண்ணிய க்ஷேத்திரங்களுக் கும் சங்கரர் சென்றுவருவார்.

இவ்விதம் சங்கரர் அநேக மாணக்கர்களுக்குப் போதித்தபின்பு, அவரது பெருமையும் கல்வித்திறமை யும் இந்தியா முழுவதும் பரவிவரவே, அத்துவைத தத்துவத்தை அறிய அவா அநேகருக்கு உண்டாயி ற்று. ஆகவே அநேகர் அவரைக்கண்டு தரிசிக்க விரும் பினார்கள். மற்ற விடங்களிலுள்ள ஜனங்களும் ராஜாக் களும், சங்கரருடைய பிரசங்கத்தைக் கேட்கவும், அவரது பாஷ்யத்திலுள்ள விஷயங்களைத் தெரிந்து

கொள்ளவும் ஆவல் கொண்டார்கள். சங்கரரும் தம் குருவின் உத்தரவுப் பிரகாரம் ஜனங்களுக்கு அத்து வைத உண்மையைப் போதிக்கவேண்டுமென்றும், சிற் சில விடங்களிலுள்ள அநாகரிகமான நடவடிக்கைகளை நீக்கவேண்டுமென்றும் விரும்பினார்.

ஆகவே, சங்கரர் தம் சிஷ்யர்களுடனும் அக் காலத்திலிருந்த காசிராஜா முதலியவர்கள் தாங்களே அளித்த பரிவாரங்களுடனும் இப்பொழுது அலஹா பாத் என்று வழங்கிவரும் ப்ரயாகைக்குப் புறப்பட் டார். இது ஆரியர்களுக்குப் புராதன நகரம். இதில் கலாசாலைக ளிருந்தன. அநேக வித்துவான்க ளிருந் தார்கள். இங்குதான் கௌதம புத்தரும் தமது கொள்கையை ஜனங்களுக்கு உபதேசித்தார். இங்கு தான் கங்கா நதியும் யமுனா நதியும் கூடுகிறது. இந்தக் கூடல் ஸ்தலத்தில் ஸ்ரீராமரும் லட்சுமணரும் தங்கி இதை வணங்கியதாக ராமாயணத்தில் கூறப்பட்டிருக் கிறது.

சங்கரர் இவ்விடத்தைக்கண்டு தரிசித்து ஸ்நானம் செய்தார். இதில் நீராடும்பொழுது தம் தாயாருக் காகவும், தம் பரமகுருவாகிய கோவிந்த யோகிக்காக வும் ஸ்நானம் செய்தாராம். ஆசான், அன்னை, பிதா முதலியவர்கள் தேவர்களுக்குச் சமானமென உப நிஷத்தில் சொல்லப்பட் டிருக்கின்றது; அதன்படி உலகத்தார் அனைவரும் நடக்குமாறு அவர் செய்து வந்தார் என்று சொல்லப்படுகிறது.

அவ்விடத்திலேயே அக்ஷயவடம் என்ற ஆலமர மொன்றிருக்கிறதாம். அதன்கீழ் சங்கரர் உட்கார்ந்து ஜபம் செய்வாராம், பிரசங்கமும் செய்வாராம். சீடர்

களுக்குப் பல விஷயங்களைப் போதித்து வந்தாராம். ராமர் லட்சுமணர் சீதாதேவி ஹனுமார் முதலியவர்கள் பிரயாகையிலுள்ள பரத்துவாஜ ரிஷியினுடைய ஆச்ரமத்தில் தங்கினார்கள் என்ற விஷயம் யாவருக்கும் தெரியுமன்றோ ?

இப்பொழுது பரத்துவாஜ கோயிலைச் சுற்றிலுமுள்ள பூமி பரத்துவாஜ ரிஷியினுடைய ஆச்ரமமாயிருந்ததாம். அந்த ரிஷி 10,000 மாணுக்கர்களுக்குத் தர்மத்திற்குச் சாப்பாடு போட்டும் படுக்க இடம் கொடுத்தும் கல்வி புகட்டி வந்தாராம். இந்த விடத்திற்குச் சமீபத்தில் இப்பொழுது அலஹாபாத்தில் சர்வ கலாசாலையும், கவர்ன்மென்ட் காலேஜும், மாணுக்கர்கள் சாப்பிட இடம், படிக்க இடம் முதலியவைகளும் கட்டப்பட்டிருக்கின்றன.

இவ்விதச் சிறப்பு வாய்ந்த நகரத்தில் வசித்துக் கொண்டு சங்கரர் தமது மாணுக்கர்களுடன் அதிகாலையில் திரிவேணிக்குச்சென்று ஸ்நானம்செய்து தமது நித்திய கடனை முடித்துக்கொண்டு பரத்துவாஜ ஆச்சிரமத்திற்குத் திரும்பி வருவார். பின்பு சீடர்களுக்கு உபநிஷத், வேதாந்தம், பகவத்கீதை, தாம் எழுதிய பாஷியங்கள் முதலியவைகளைப் போதிப்பார். சாயங் காலம் தம் சீடர்களுடன் பற்பல விஷயங்களைக் குறித்துப் பேசுவார். அச் சமயத்தில் அவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதிலளிப்பார். அவர்களுக்குச் சந்தேகம் ஏதாகிலுமிருந்தால் அவைகளையெல்லாம் நீக்கி விடுவார். இவ்விதம் அவர் தமது காலத்தைப் பிரயாகையில் வீண்போக்காமல் செலவழித்து வந்தார். ஆனதுபற்றிதான் அவரிடத்தில் பற்பல விடங்களி

லிருந்து பல விவேகிகள்வந்து வேதாந்த தத்துவத்தைப் படித்துவந்தார்கள். அவரது கீர்த்தி இமாலய மலைமுதல் ராமேஸ்வரம் வரையில் பரவிற்று.

இவ்விதம் சங்கரர் பிரயாகையில் நற்காரியங்களைச்செய்து வருகையில், ஒருநாள் சங்கரர் தம் மாணாக்கர்களுடன் அக்ஷயவடம் என்ற ஆலமரத்தினருகில் வந்தார். அங்கு ஒரு வாலிப பிராமணன் தன் உயிரை எப்படியாவது விட்டுவிடப் பிரயத்தனம்செய்துகொண்டு இருந்தானும். ஏனெனில் அவன் குஷ்டரோகத்தால் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டு இருந்தான். அவன் அச்சமயம் சங்கரரை அங்கு கண்டதும், நமஸ்காரம்செய்து, "சுவாமிகளே! இவ் வியாதியால் யான் படும் துயரம் இவ்வளவு அவ்வளவல்ல; மேலும் என் உறவினர்களும், சிநேகிதர்களும் என்னைக் கண்டால் வெறுப்படைந்து என் அருகில் வராமல் வெகுதூரம் போய்விடுகிறார்கள். எனக்கோ அதிக அவமான முண்டாகிறது; ஆனதுபற்றி தற்கொலை செய்து கொள்ளலாமென்று இங்கு வந்தேன்" என்றான்.

சங்கரர் அவன் சொல்வதைக் கேட்டு இரக்கங்கொண்டு, அவனை உடனே தமது கையால் தொட்டுக் கடவுளைத் துதித்தார். அவ்வாலிபனுடைய வியாதி நீங்கிற்று. உடனே அவன் அழகு வாய்ந்தவன்போலத் தென்பட்டான். "சுவாமிகளே! என்னைத் தங்களுடைய மாணாக்கர்களி லொருவனாக ஏற்றுக்கொண்டு எனக்குக் கல்வி புகட்டி வரும்படி தங்களை வேண்டிக் கொள்ளுகின்றேன்" என்று சொன்னான்.

சங்கரரும் அவ்விதமே அவனை மாணாக்கனாக வைத்துக்கொண்டு அவனுக்கு வேதாந்த தத்துவம்

முதலியவைகளைப் போதித்து வந்தார். வெண்குஷ்டம் நீங்கிவிட்டமையால் அவனை யாவரும் உதங்கா வென்று பெயரிட்டு அழைத்தார்கள்.

உதங்கர் சிலகாலம் படித்துத் தேறியபின்பு சந்நியாசம் பெறவேண்டுமென்று விரும்பினார். சங்கரர் அவரைப் பல கேள்விகள் கேட்டார். அவைகளுக்குத் தகுந்த விடைகளை உதங்கர் அளிக்கவே, சங்கரர் மிகவும் மகிழ்ந்து அவருக்கு சந்நியாசமும் அளித்தார். உதங்கர் பயபக்தியுடன் உண்மையான சீடராயிருந்தார்.

பின்பொருநாள் சங்கரர் தம் மாணாக்கர்களுடன் ப்ரதிஷ்டானபுரிக்குச் சென்றார். இது பிரயாகைக்குக் கிழக்கு எல்லையிலிருக்கிறது. இதற்குத் தற்காலம் ஜன்சி என்று பெயர். இது ஒரு சிறு கிராமம். இது கங்கையின் ஓரத்திலும் அலஹாபாத் கோட்டைக்கு எதிரிலுமிருக்கிறது. இது அங்கு அரசுபுரிந்த அரசனது புராதனபட்டணமாயிருந்தது. இது எத்தனை காலம் இவ்விதம் வழங்கிவந்ததென்பது தெரியவில்லை. சங்கரர் இங்குவந்த காலத்தில் இதனுடைய பெருமையெல்லாம்போய் ஒரு சிறு பிராமண அக்கிரகாரமாயிருந்தது. இதற்குப் பெயர் ஸ்ரீவல்லி. பின்பு இது பெருந்தீப்பற்றி அழிந்துவிட்டதாம். அக்கால முதற்கொண்டு இதற்கு ஜன்சி என்ற பெயர் வழங்கிவருகிறது.

காளிதாசர் இயற்றிய விக்ரமோர்வசியம் என்ற நாடகத்திற்குரிய காட்சிகளெல்லாம் இங்குளதெனவும், இங்கிருந்துதான் காளிதாசர் அக்காட்சிகளை அதில் அமைத்தாரெனவும் சொல்லப்படுகிறது.

இக்கிராமத்தில் ப்ரபாகராசாரியா ரென்ற வித்துவானிருந்தார். அவர் மோக்ஷமடையவேண்டுமானால் பிரம்மஞானம் தேவை யென்பதை நம்பாமல் வேதத்தில் சொல்லியபடி கர்மம்செய்தால் போது மென்ற கொள்கையுடையவரா யிருந்தார். அவர் சங்கருடன் தத்துவசாஸ்திரங்களில் பற்பல விஷயங்களைப் பற்றித் தர்க்கம் செய்தார். சாந்த குணமும் ஆழ்ந்த யோசனையும், முதிர்ந்த ஞானமும் வாய்ந்த சங்கரர், அவர்செய்த வாதங்களுக்குச் சரியான மறுமொழி பகர்ந்தார். ப்ரபாகரர் கடைசியாக சங்கரர் சொல்வது சரியென்று ஒத்துக்கொண்டு அவருக்குச் சீடரானார். அவர் அவ் விதம் செய்யவே, அவ்வூரார் எல்லோரும் சங்கருடைய அத்துவைத மதத்தைத் தழுவலானார்கள்.

ப்ரபாகரருக்கு ஒரு பிள்ளையுண்டு. அப்பிள்ளை பிறந்தது முதல் ஊமையாய். ஆகையால் ப்ரபாகரர் தம் பிள்ளையை சங்கரருக்குக் காண்பித்து பிள்ளைக்குள்ள வியாதியை நீக்கும்படி சங்கரரை வேண்டிக் கொண்டார். அப் பிள்ளையின் பெயர் ப்ருதிவீதரன். சங்கரர் அப்பிள்ளையைத் தம் கையால் தொட்டார். உடனே அப்பிள்ளை பேச ஆரம்பித்தான்; சங்கரர் அவனைப் பல கேள்விகள் கேட்டார். அவன் எல்லாவற்றிற்கும் சரியான விடைபகர்ந்தான்.

ப்ரபாகரர் தம் பிள்ளை தத்துவஞானமடைந்ததைக் குறித்து மிகவும் ஆச்சரியங் கொண்டு, "சுவாமிகளே! எனக்கு சந்நியாசி ஆச்ரமம் பெற விருப்பம் உண்டாயிருக்கிறது. ஆகையால் அதைப் பெற எனக்கு உத்தரவு அளிக்கவேண்டும்" என்று சங்கரரைக் கேட்டார். சங்கரர் உடனே தகப்பனை

ருக்கும், பிள்ளைக்கும் அத்வைத தத்துவ ஞானத்தை உபதேசித்தார். இருவருக்கும் சந்நியாசம்பெற அநுமதி கொடுத்தார். முறையே இருவரும் சந்நியாசம் பெற்றார்கள். ப்ருதிவீதரனுக்கு ஹஸ்தாமலகர் என்னும் புதுப்பெயரிட்டார்.

உடனே சங்கரர் தம் புதிய இரண்டு சீடர்களுடனும் மற்ற சீடர்களுடனும் பாரத்வாஜ ஆச்ரமத்துக்குப் புறப்பட்டார். அவர் ஊமையைப் பேசும்படிசெய்த விஷயமும், ப்ரபாகரர் சங்கரருக்குச் சீடரானதும் பிரயாகை முழுவதும் பரவிற்று. ஜனங்கள் திரளாகச் சந்தோஷத்துடன் அவரைப் பின் தொடர்ந்து வந்தார்கள். பாரத்துவாஜ ஆச்ரமத்துக்கு அவர் வந்தவுடன் சீடர்களைத் தவிர மற்றவர்களெல்லாம் சங்கரருடைய உத்தரவு பெற்றுக்கொண்டு தங்கள் இருப்பிடங்களுக்குப் போனார்கள். வழக்கம்போல் சங்கரர் இங்கு ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்துகொண்டும் சீடர்களுக்கு ஞானவொளியைப் போதித்துக் கொண்டுமிருந்தார்.

ஒருநாள் சங்கரர் பிரயாகையிலிருந்து கௌசாம்பி என்ற புராதன நகரத்திற்குப் போனார். இது புராதன பெரிய நகரங்களிலொன்று. இது யமுனா நதிக் கரையிலிருப்பதால் நிலவளம் உடையது. ஆகையால் இங்குள்ள ஜனங்கள் யாதொரு குறையுமின்றி சுகமாய் ஜீவனம்செய்து வந்தார்கள். அங்கு ஒரு வீட்டில் ஓர் ஆண்பிள்ளை இறந்துவிட்டது. அப்பிள்ளையின் பெற்றோர்கள் தங்களுடைய ஒரே மகன் திடீரென்று இறந்துவிட்டதைக் குறித்து மிகவும் விசனப்பட்டுக்கொண் டிருந்தார்கள்.

அச்சமயம் அவ்வீட்டின் வழியாய்ப் போய்க் கொண்டிருந்த சங்கரர் அவர்களது அழுகைக் குரலைக் கேட்டு மனமிரங்கினார். அவ்வீட்டிற்குப் போய் சங்கதி என்னவென்று அவ்வீட்டிலுள்ளோரை விசாரித்தார். சங்கதியைத் தெரிந்துகொண்டு மிகவும் துக்கித்தார் 'ஐயோ! இவர்களது துக்கத்தை எவ்விதம் நீக்குவது?' என்று மனதில் நினைத்தார். அவர்களின்மீது இரக்கங் கொண்டார். தமது அநுதாபத்தைத் தெரிவித்தார். அப்பொழுது "விசனப் படுபவனைப் பார்த்து இரக்கங்கொள்வதில் பிரயோஜனமேயில்லை. அவ்விதம் அன்பும் இரக்கமும் உள்ளவன் அப்பெற்றோர்களின் துக்கத்தை நீக்கவேண்டும்" என்று அசரீரி வாக்குண்டானதாம்.

உடனே சங்கரர் "உலகரக்ஷகராகிய கடவுளுக்குத்தான் அவ்வித சக்தியுண்டு, ஆகையால் அவர் அநுக்கிரகமிருந்தால் இறந்த பிள்ளை பிழைக்கும்" என்று சொல்லிக் கடவுளைத் துதிசெய்தார். இறந்த பிள்ளை உயிருடன் எழுந்ததாகவும் பெற்றோர்கள் மிகவும் மகிழ்ந்து சங்கரரை வணங்கி அவருக்கு வந்தனமளித்ததாகவும் சொல்லப்படுகிறது.

இச் சங்கதி கௌசாம்பி நகரமுழுதும் பரவிற்று. அவ்வூர் ஜனங்கள் மிகவும் ஆச்சரியமடைந்து அவரைக்கண்டு களிக்க வந்தார்கள். பலர் அவரைக்கண்டு வணங்கினார்கள். சிலர் சீடர்களானார்கள். சங்கரரும் பிரயாகைக்குத் திரும்பிவந்துவிட்டார்.

சங்கரர் இங்கு வழக்கம்போல் தமது கடமையைச் சரிவரச் செய்துவருகையில் ஒருநாள் த்ரிவேணியில் ஸ்நானம்செய்து, ஒரு மரத்தடியில் உட்கார்ந்து

கடவுளைத் தொழுதுகொண்டிருந்தார். அப்பொழுது ஒருவர் சங்கரரிடம் ஓடிவந்து, "சுவாமிகளே, பூர்வ மீமாம்ஸையில் நிபுணராகிய குமாரிளபட்டர் என்றொருவர் தமது உயிரை விட்டுவிடும் தறுவாயிலிருக்கிறார்" என்றார். சங்கரருக்கு அவருடன் தர்க்கித்து அவரை நல்வழிக்குக் கொண்டுவர வேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. மேலும் தற்கொலை செய்பவனை எப்படியாவது அவ்விதச் செய்கையினின்று நீக்கவேண்டுமென்றும் நினைத்தார். ஆனதுபற்றி உடனே தமது சீடர்களுடன் அவரிருக்கு மிடத்திற்குப் போனார்.

குமாரிளர் நெருப்புக்குண்டம் செய்து அதில் விழுந்துவிட ஏற்பாடு செய்கையில் சங்கரர் "ஐயா, சற்றுப் பொறும்" என்று சொல்லிக்கொண்டு துரிதமாய்ச் சமீபத்தில் வந்தார். உடனே குமாரிள பட்டரைப்பார்த்து, "ஐயா, நீங்கள் இவ்விதம் தற்கொலை செய்துகொள்ளலாமா" என்று கேட்டார்.

தம்மை இவ்விதம் கேட்பவர் இன்னாரென்றறிந்து, "ஐயா, கேளும், நான் மதவைராக்கியத்தால் எனது குருவை நாசஞ்செய்தேன். அன்றியும் கர்மத்திற்கு எல்லா சுதந்திரமுமுண்டு. கடவுள் வேறில்லை என்றும் சொல்லிவந்தேன். இப்பொழுது நான் அவ்விதம் செய்துவந்தது தப்பென்று வேதாந்த தத்துவத்தால் அறிகிறேன். அப்பாபத்தை நீக்கிக்கொண்டு என்னைப் பரிசுத்தனாக்கிக் கொள்ளவே, இத்தீயில் விழுந்து உயிர்விடப் போகிறேன்" என்றார்.

சங்கரர் அத்துவைத வேதாந்த தத்துவத்தையறிந்து அதன்படி நடந்தால் இப்பாபம் தொலையும் என்றும், இன்னும் பல சமாதானங்களையும் அவருக்குச் சொன்னார்.

குமாரிளர் பிடிவாதக்காரர். மேலும் தமது பாபத்தை நீக்கிக்கொள்ளவேண்டுமென்று மனவுறுதி யுடையவரா யிருந்தமையால் சங்கரர் சொல்லியவை சரியென்று ஒத்துக்கொண்ட போதிலும் தமது உயிரை விட்டுவிடவே தீர்மானித்தார். அதற்காக அவர் சிறிதும் தயங்கவில்லை.

சங்கரர் "ஐயா, தங்களுடன் நான் தர்க்கிக்கவும் எனது ப்ாஷ்யத்தைக் காண்பிக்கவும் விரும்பி இங்கு வந்தேன். எனக்குப் பாக்கியமில்லையே!" என்றார்.

குமாரிளபட்டர் "சங்கரரே, அப்படி நினையாதேயும். உம்மைக் கண்டவுடன் நான் பாபத்தி னின்று நீங்கிவிட்டேன். இனி எனக்கு நற்கதி கிடைக்கும். நீங்கள் செய்த பாஷ்யத்தைப் பார்ப்போம்" என்று சொன்னார்.

உடனே சங்கருடைய சிஷ்யர்களில் ஒருவரா கிய பத்மபாதர் அவருக்கு பாஷ்யத்தைக் காண்பித்து சிலவற்றைப் படித்தார். குமாரிளபட்டர் அவை களைக் கேட்டு மிகவும் மகிழ்ந்து, "அத்துவைத வேதாந்தமே இதில் செவ்வனே சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விதம் எவரும் எழுதமுடியாது. எனக்கு பிரம்மோபதேசம் செய்யும்" என்று சங்கரரை வணங்கிக் கேட்டுக்கொண்டார். சங்கரரும் அவருக்கு அவ்விதம் உபதேசம் செய்தனர்.

உடனே குமாரிளபட்டர் "சங்கரரே, மகத தேசத்தில் மாஹிஷ்மதி நகரத்தில் மண்டனமிச்ரர் என்ற வித்துவானிருக்கின்றார். அவர் என் உறவினர். எனது சகோதரியை மணம் புரிந்திருக்கிறார். என் சகோதரியும் சகல சாஸ்திரங்களையும் படித்திருக்கின்

ருள். மண்டனமிச்ரர் எனது மாணுக்கர்களில் சிறந்தவர். அவர் இப்பொழுது கர்ம மார்க்கத்தில் ஈடுபட்டிருக்கிறூர். அவர் எல்லா சாஸ்திரங்களையும் படித்து அவைகளைச் செவ்வனே பரிசோதித்திருக்கிறூர். தர்க்கிப்பதில் என்னைவிடச் சமர்த்தர். அவருடன் நீங்கள் அத்துவைத வேதாந்த தத்துவ தர்மத்தைப்பற்றி தர்க்கம் செய்யுங்கள். அவரை ஜயித்து உங்கள் மாணுக்கர்களி லொருவராகவும் அவரைச் செய்துகொள்ளுங்கள்'' என்று சொல்லிவிட்டு, சங்கரரிடம் விடைபெற்றுக்கொண்டு, தீக் குண்டத்தில் விழுந்து தமது உயிரைத் துறந்தார்.

சங்கரர் அவ்விதமே மகததேசத்திற்குப் போவதற்காக ஏற்பாடு செய்யத் தமது ஆச்ரமத்திற்குத் தமது மாணுக்கர்களுடன் திரும்பிச் சென்றூர். சில நாள் சென்ற பின்பு சங்கரர் தமது சீடர்களுடன் மகத ராஜ்யத்திற்குப் புறப்பட்டார். வழியிலுள்ள சிற்சில முக்கிய ஸ்தலங்களைக்கண்டு களித்துக் கடைசியாக மகதராஜ்யத்திற்கு முன் முக்கியபட்டணமாய் இருந்த மாஹிஷ்மதி நகரத்திற்கு வந்தார்.

மண்டனமிச்ரர் ராஜசபையில் ஒரு சிறந்த வித்வானுயிருந்தார். அவருக்கு அநேக சீடர்களுண்டு. மிக்க தனவந்தர். அவருடைய வீடு ராஜாவின் அரண்மனைபோல் இருந்ததாம். அவ்வீட்டில் அநேக வேலைக்காரர்க ளிருந்தார்கள். அவரது வீட்டில் நானுவித அழகுவாய்ந்த பறவைகளிருந்தனவாம். அவைகளில் கிளிகள் அவரது கர்மமார்க்க சம்பந்தமான கேள்விகளைச் சொல்லிக்கொண் டிருந்தனவாம். இவ்விதச் சிறப்புடன் வசித்துவரும் மண்டனமிச்ரர் வீட்டிற்கு சங்கரர் தமது மாணுக்கர்களுடன் வந்தார்.

மண்டனமிச்ரர், வந்தவர் சந்நியாசியாயிருந்தமையால் அவரை வரவழைக்க மனமின்றி, அவருடன் சிறிதுநேரம் சம்வாதம் செய்தபின் அவருடைய கல்வி அறிவையும், நற் குணத்தையும் கண்டு மகிழ்ந்தார். உடனே சங்கரரை மரியாதையுடன் உள்ளே வரவழைத்து ஆசனமளித்து அதில் உட்காரும்படி சொன்னார். சங்கரர் மண்டனமிச்ரரைப் பார்த்து, "ஐயா, உமது கல்வியறிவைக் கேள்வியுற்று உம்முடன் கர்மமார்க்கத்தைப் பற்றியும் அத்துவைத தத்துவத்தைப் பற்றியும் தர்க்கம் செய்ய வந்திருக்கின்றேன்" என்றார்.

மண்டனமிச்ரர் சிறந்த வித்துவானல்லவா? மேலும் தைரியம் பொருந்தியவர். ஆனால் கர்ம மீமாம்ஸையில் நம்பிக்கை யுள்ளவர். நித்ய அநுஷ்டானங்களை விட்டுவிட்டு, சந்நியாசிகளா யிருப்பவர்களைக் கண்டால் அவருக்கு வெறுப்புண்டாகும். வந்தவர் சந்நியாசி யென்பதையறிந்தும் மேற்கூறிய காரணங்களால் அவரை வெறுக்கவில்லை. மரியாதையாக சங்கரரைப் பார்த்து "ஐயா, அவ்விதம் செய்வோம்" என்றார்.

அவருக்கு பாரதி என்ற மனைவியுண்டு. அவள் கல்வியிற் சிறந்தவள். சகல சாஸ்திரங்களையும் கற்றுணர்ந் திருந்தாள். அவள் சரஸ்வதியே அவதாரமெடுத்தாற்போல் மண்டனமிச்ரருக்கு மனைவியாக வாய்த்தாள். அவள்தான் முன்சொல்லிய குமாரிள பட்டருடைய சகோதரி. இவ்வித கல்வி அறிவும், ஞானமுமுடைய பாரதியை இருவரும் தங்கள் வாதத்தில் யார் ஜயிக்கிறார், யார் தோல்வியடைகிறார் என்பதை நியாயமாய்ச் சொல்லும்படி கேட்டுக்

கொண்டார்கள். பாரதியாரும் சம்மதித்தாள். தர்க்கத்தில் மண்டனமிச்ரர் தோல்வியடைந்தால் சங்கருக்குச் சீடனாகி, சந்நியாசம் கொள்வதாகவும், சங்கரர் தோல்வியடைந்தால் சந்நியாசத்தை விட்டுவிட்டு விவாஹம்செய்துகொண்டு இல்லறத்தை நடத்துவதாகவும் இருவரும் சபதம் செய்துகொண்டார்கள்

அநேக வித்துவான்களும், இவ்விருவருடைய சீடர்களும், பொதுஜனங்களும் ராஜசபைக்குக் கூட்டமாய் வந்து உட்கார்ந்தார்கள். இவ்விரு வித்துவச் சிரோமணிகளும் தர்க்கம் செய்ய ஆரம்பித்தார்கள். இருவரும் சிறந்த வித்துவான்கள். சாஸ்திர ஆராய்ச்சியில் நிபுணர்கள். வாதாடுவதில் சமர்த்தர்கள். வாதமோ ஒருவாரம்வரையில் நடந்தது. கடைசியில் மண்டனமிச்ரர் தோல்வியடைந்தார். தாம் தோல்வியடைந்ததைப்பற்றி அவர் சிறிதும் விசனப்படாமல் மனமகிழ்ச்சியுடன் சங்கருடைய வாதங்களைக் கேட்டபின், அவரது அத்துவைத தத்துவ ஞானமே சிறந்ததெனச் சொல்லி, தாம் சந்நியாசம் பெறவும், அவருடன் கூடவிருந்து அவரது கொள்கையின்படி நடக்கவும் ஒத்துக்கொண்டார்.

பாரதியார் தமது கணவர் தோல்வியடைந்ததைக் கண்டு, "ஐயா, சங்கரரே, என்னுடன் தர்க்கம் செய்ய வாரும்" என்று தைரியமாய்ச் சொன்னாள்.

சங்கரர், "ஓ மாதுசிரோமணியே, நான் ஒரு சந்நியாசி, உம்முடன் தர்க்கம் செய்வது தகுமா?" என்றார்.

பாரதியார், "நாங்கள் சிறந்த வித்துவான். எல்லா சாஸ்திரங்களையும் நன்குணர்ந்திருக்கின்றீர்கள். நான்

பெண்ணுலென்ன? ஞானம் சிறந்ததா? உடல் சிறந்ததா? சந்நியாசிகள் மாத்திரம் தர்க்கம் செய்யலாமா? கார்க்கி என்ற மாது யாக்ஞவல்கிய ரிஷியுடன் வாது புரியவில்லையா? சுலபை என்பவள் ஜனகமகாராஜனுடன் தர்க்கம் செய்யவில்லையா? அவர்கள் ஞானிகளென்று நற்பேரடையவில்லையா? நானும் எனக்கிருக்கும் அறிவைக்கொண்டு சாஸ்திர ஆராய்ச்சி செய்திருக்கிறேன். எனக்கும் தர்க்கம் செய்ய சக்தியுண்டு; ஆகையால் உடனே தர்க்கம் செய்ய தயவுசெய்து வாருங்கள்'' என்றாள்.

அக்காலத்தில் ஸ்திரீகள் கல்வி கற்று சுயேச்சையுடனிருந்தார்கள் என்பது உண்மையே. மகமதியர்கள் இந்தியாவிற்கு வந்த பின்புதான் ஸ்திரீகள் பெரும்பான்மையோர் படிக்காமலும் வெளியில் வராமலுமிருக்கத் தலைப்பட்டார்கள்

பாரதியார் சொன்னவைகள் யாவும் உண்மையாயும் நியாயமாயும் இருந்தமையால், சங்கரர் பாரதியாருடன் தர்க்கம் செய்ய ஆரம்பித்தார். தர்க்கம் ஒரு வாரத்திற்குமேல் நடந்தது. கடைசியாகப் பாரதியாரும் தோல்வியடைந்தாள்.

உடனே மண்டனமிச்ரர் சந்நியாசம் பெற்றுக்கொண்டார். இவ்வுலகப்பற்றைத் துறந்தார். சுத்தமான ஞானமே மேலானதென்ற அத்துவைத வேதாந்த தத்துவத்தின் உண்மையைப் பரவச்செய்யலானார். அக்காலம் முதற்கொண்டு அவருக்கு சுரேசுராசாரியார் எனப் பெயர் வழங்கலாயிற்று.

பாரதியார், "சபையோர்களே, வாக் என்றமாது அம்பிரண ரிஷியின்பெண். இவள் சமஸ்கிருதம் படித்

துப் பலசாஸ்திரங்களைக் கற்றாள். பின்பு ருக்வேத கீதங்களைப் பாடினாள். அவைகளில் வேதாந்த தத்துவ உண்மை அடங்கியிருக்கின்றது. அம்மாது பின்பு சந்நியாசியாகவே யிருந்து, கடவுளைத் துதி செய்து கொண் டிருந்தாளன்றோ? அவளைப்போல் நானும் சந்நியாசம்பெற ஆவல்கொண் டிருக்கிறேன்'' என்று யாவருக்கும் கம்பீரமாய்ச் சொன்னாள்

பின்பு பாரதியார் சங்கரரைப் பார்த்து "சுவாமிகளே, இனி நான் தங்களுடைய மாணவி, எனக்கு சந்நியாசம்பெற உத்தரவளிக்க வேண்டும்'' என்றும் கேட்டாள். சங்கரரும் சம்மதிக்கவே, பாரதியார் சந்நியாசம் பெற்று சிருங்ககிரியில் கடவுளைத் தியானித்துக்கொண்டு தபசு செய்துகொண் டிருந்தாளாம். சிற்சில சமயங்களில் அத்துவைத வேதாந்தத்தை ஜனங்களுக்குப் பிரசங்கம் செய்து உபதேசித்தும் வந்தாளாம்.

மாஹிஷ்மதியின் அரசனும், மந்திரி, வித்துவான்கள் முதலியோரும் அத்துவைத மதத்தைப் பின் தொடர ஆரம்பித்தார்கள். சங்கரர் இதரமதஸ்தர்களைக் கண்டிக்காமலும், அவர்கள் ஞான மார்க்கத்தையறிய முயன்றால் போதுமெனவே விரும்பியிருந்தமையாலும் அவருடைய கொள்கையை அநேகர் பின்பற்றலானார்கள். யாகாதிகர்மங்கள் செய்பவர்களைத் தொந்தரவு செய்பவில்லை. ஆனால் அநாகரிகச் செயல்களை விட்டுவிடும்படி புத்தி புகட்டிவந்தார். அவர் இவ்விதம்செய்து வந்தமையால்தான் அவரது பெருமை எங்கும் பரவலாயிற்று. ஆனால் அவர் பெருமையடையவேண்டுமென்று சிறிதும் பாடுபடவில்லை.

உலகத்தாருக்கு ஞானத்தைப் புகட்ட வேண்டுமென்ற பரோபகாரச் சிந்தையுடனேயே உழைத்து வந்தார்.

சிறிதுகாலஞ் சென்றபின்பு சங்கரர் தக்காணத்திற்குப் புறப்பட்டார். மகாராஷ்ட்ர தேசம் வழியாக வந்து அங்கு அத்துவைத மதத்தை யாவருக்கும் எளிதில் விளங்கும்படி போதித்தார். அங்கு நடந்துவந்த கெட்ட நடவடிக்கைகளைச் செய்யக்கூடாதெனக் கண்டித்து அவைகளை நீக்கினர். தாம் நேரில் போகச் சாத்தியப்படாத விடங்களுக்குத் தம் சீடர்களை அனுப்பி வேதாந்த உண்மையைப் போதித்து வரும்படி உத்தரவு செய்தார்

மகாராஷ்டிரத்தில் ஒருவகைப் பிராமணர்கள் பரமசிவனை மல்லாரி என்று பெயரிட்டுப் பூசித்து வந்தார்கள். நாய் அவருக்கு வாகனம் என்று கருதி அதையும் பூசித்து வந்தார்கள். வேதத்தில் ஓரிடத்தில் 'நாய்களுக்கு எஜமானராகிய உமக்குக் கோடி நமஸ்காரம்' என்று சொல்லப்பட்டிருக்கிறது. இதை அவர்கள் ஆதாரமாக வைத்துக்கொண்டு அக் காலத்து ஜனங்கள் தங்களிஷ்டப்படி வேதத்தி லுள்ளவைகளுக்கு அர்த்தம் செய்து அதன்படி நடந்துவந்தார்கள். ஆகையால்தான் அவர்கள் பரமசிவனை வணங்கியும் நாயையும் தெய்வமாகக் கொண்டாடியும் வந்தார்கள். இப்பொழுதும் அத்தேசத்தில் சிலர் நாயைத் தங்கள் குலதெய்வமாகப் பாவித்து வருகிறார்களாம். தசரா (நவராத்திரி) உற்சவகாலத்தில் மல்லாரியையும் அவருக்கு வாகனமாகிய நாயையும் மிகவும் விசேஷமாகப் பூசித்து வருகிறார்களாம்.

சங்கரர் அத்தேசத்திலுள்ள ஜனங்கள் மூடத்தனமாய் இவ்விதம் செய்துவருவது மிகவும் தப்பிதமென்றும், நாய் அசுத்தமான பிராணியென்றும், அதைப் பூசிப்பது தகுதியல்லவென்றும் அங்குள்ள ஜனங்களுக்குப் புத்தி புகட்டிவந்தார். பின்பு அத்துவைத மதக் கொள்கையைப் பரவச்செய்தார்.

அவ்விடத்திலேயே காபாலிகர் என்ற ஒரு வகுப்பார் அதிக கோரமான செயல்களைச் செய்து வந்தார்களாம். அச் செயல்களைக் கண்டு மனம் பொறுமல் சங்கரர் அவர்களைச் சீர்திருத்த மிகவும் முயன்று வந்தார்.

காபாலிகர்களுக்கு முக்கிய தேவதை பைரவர். பரமசாதுவும் வித்துவானுமாயிருக்கிற பிராமணனைப் பலி கொடுத்தால்தான் அத்தேவதைக்குச் சந்தோஷமுண்டாகுமென்று காபாலிகர் எண்ணி, அவ்விதம் செய்து வந்தார்கள். மகாராஷ்டிர பிராமணர்களில் ஒருவகுப்பாராகிய காராடி என்பவர்கள் தென்னிந்தியாவிலிருந்து காசிக்குப்போகும் மனிதர்களில் ஒருவனைப் பிடித்துத் தங்கள் வீட்டில் ஒரு வருஷம் வரையில் நன்றாகச் சாப்பாடுபோட்டு அவனது தேகம் பெருக்கும்படி செய்வார்களாம். கடைசியில் தசரா காலத்தில் துர்க்காதேவிக்கு அம்மனிதனைப் பலி கொடுப்பார்களாம்.

அநாகரிகமாயும் பயங்கரமாயும் இரக்கமற்றதாயுமுள்ள மேற்கூறிய செயல்களைத் தடுக்க சங்கரர் முயன்று வருகையில், ஒரு காபாலிகன் சங்கரரிடம் வந்து, "ஐயா, தங்களது கொள்கையின் பிரகாரம் உடல் மாயையல்லவோ? அது இருந்தாலென்ன?

இல்லாவிடின் என்ன? தங்களுக்கு லாபமுமில்லை, நஷ்டமுமில்லை அல்லவா? என் மதப்படி உங்களைப் பரமசிவனுக்குப் பலிகொடுத்தால் மோக்ஷம் கிடைக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஆனதுபற்றி, ஐயா, அவ்விதம் நான் செய்ய தங்களுக்குச் சம்மதமா'' என்று கேட்டான்.

“அப்பா, எனக்குச் சம்மதம்தான் ஆனால் நான் தனிமையாயிருக்கும்பொழுது என்னைப் பலி கொடு'' என்று சங்கரர் சொல்லிவிட்டு யோகநிஷ்டையிலிருந்தார்.

அந்தக் காபாலிகன் சமயம் எப்பொழுது வாய்க்குமென்று சிலநாள் காத்துக்கொண்டிருந்தான். ஒரு நாள் சங்கரருடைய மாணாக்கர்களில்லாத வேளையில், அந்தக் காபாலிகன் ஒரு கத்தியை எடுத்து ஓடிவந்து சங்கரருக்குப் பின்னால் நின்றுகொண்டு அவரை ஒரே வெட்டாய் வெட்டக் கத்தியை ஓங்கினான். அச் சமயத்தில் வெளியிற் போயிருந்த பத்மபாதர் திடீரென்று வந்தார். அத்துஷ்டன் தமது குருவைக் கொல்லப் போவதைப் பார்த்தவுடன் பத்மபாதர் கோபமூண்டு ஒரே பிடியாய் அவனைப் பிடித்துக் கீழேதள்ளி அவனது கத்தியைக்கொண்டே அத்துஷ்டனைக் கொன்றுவிட்டார்

சங்கரர் யோகநிஷ்டையிலிருந்து கண்விழித்துக் கொண்டவுடன் நடந்த சங்கதி யாவும் சங்கரருக்குத் தெரிந்தது. அப்பொழுது பத்மபாதர் அதிக கோபத்துடனிருந்தாராம். அவரைச் சங்கரர் கண்டு, “வெளியிற் சென்றிருந்த நீ திடீரென்று வந்து அத்துஷ்டனை எவ்விதமோ தண்டித்துவிட்டாயே! இன்னும் ஏன் கோபமாயிருக்கிறாய்? கோபம் பொல்லாது. கோப

த்தை விட்டுவிடு. மனிதனுக்குக் கோபம் சிறிதும் வரக்கூடாது. உன்னிடத்தில் பொறுமையே குடி கொண்டிருக்கவேண்டும்'' என்று புத்தி புகட்டினாராம்.

சிறிது காலஞ் சென்றபின்பு மகாராஷ்டிர தேசத்தைவிட்டுச் சங்கரர் தம் மாணுக்கர்களுடனும் ராஜ பரிவாரங்களுடனும் துங்கபத்திரை யென்னும் நதிக்கரையில் ருஷிய சிருங்க மகா ரிஷியின் ஆச்ரமத்திற்கு வந்தார். அவ்விடத்திற்குச் சமீபத்தில் காசிபர், வசிஷ்டர், பராசரர் முதலியவர்களுடைய ஆச்ரமங்களிருந்தமையாலும் அதுதான் சிறந்த விடமென்று நினைத்து, அங்கு சிறிதுகாலங் தங்கினர். இங்குள்ளவர்களுக்கு அத்துவைத உண்மையையும் இன்னும் பற்பல அரிய விஷயங்களையும் போதித்து வந்தார்.

பின்பு அங்கு ஒரு கோயிலைக்கட்டி சரஸ்வதியை (பாரதியாரை) ஸ்தாபித்து, தினம் பூசை நடக்கவும் ஏற்பாடுசெய்தார். இதற்குச் சமீபத்தில் ஒரு மடத்தையும் கட்டி வைத்தார். அதற்கு அதிபதியாய் மண்டனமிச்ரரை நியமித்தார். நியமித்தபடியே மண்டனமிச்ரரும் அம்மடத்திலேயே தங்கி வேதாந்தத்தைப் போதித்துவந்தார்.

அந்த மடத்திற்கு சிருங்ககிரி மடமென்று பெயர். அப்போது அங்கு அரசு புரிந்துவந்தவனாகிய வீரசேனனென்பவன் சங்கரருக்குக் கோயில், மடம் முதலியவைகளைக் கட்ட மிக்க உதவி புரிந்ததாகவும் தெரிகிறது. சிருங்ககிரி மடம் கல்விக்கும், பக்திக்கும் பெயர் பெற்றது. இந்தியாவிலுள்ள ஜனங்கள் எல்லோரும் சங்கரரைத் தங்கள் குருவென்று அங்கீகரித்தார்கள். அங்கு சங்கரர் தமது நித்தியக் கடனை

முடித்துக்கொண்டு நாடோறும் தம் சீடர்களுக்குப் பற்பல விஷயங்களைப் போதித்து வந்தாராம். இவ்விதம் அவர் செய்துவரவே, அநேகர் கல்வி கற்கவும் உபதேசம் பெறவும் வந்தார்களாம்.



சிருங்ககிரியிலுள்ள மடம்

இப்பொழுதும் அங்குள்ள சங்கராசாரிய சுவாமீகள் பற்பல மாணாக்கர்களுக்கு வேதாந்த நூலைப் போதித்து வருகிறார்கள். மடத்தில் வேதாந்தத்தில் தேர்ந்த நிபுணர்கள் இருக்கின்றார்களாம். இம் மடத்திற்கு இப்பொழுது ஏராளமான பூஸ்திதி, தனம் முதலியவைகள் இருக்கின்றன.

இவ்விதம் சங்கரர் சிருங்ககிரி மடத்தில் மதசம்பந்தமாய் அத்வைத வேதாந்த உண்மையைத் தம் மாணுக்கர்களுக்குப் போதித்துக்கொண்டும், தமது நித்திய கடனைச் சரிவரச் செய்துகொண்டும் வந்தனர்.

சங்கரர் வேதாந்த சூத்திரத்திற்கு முன்னமேயே உரை எழுதியிருந்தா ரல்லவா? அதற்கு விருத்தியுரை தம் மாணுக்கர்களில் ஒருவராகிய மண்டன மிச்ரர் எழுதினுல் மிகவும் சிறந்ததாயிருக்குமென்று நினைத்தார். உடனே மண்டனமிச்ரரை எழுதும்படி கேட்டாராம்.

உடனே சங்கரருடைய மற்ற மாணுக்கர்கள், "பத்மபாதர் அவ்வித விருத்தியுரை எழுதினுல் நலம். ஏனெனில் மண்டனமிச்ரர் தர்க்கத்தில் தோல்வியடைந்து சந்நியாசம் பெற்றுத் தங்களுக்குச் சீடராயிருக்கிறுர். அவர் விருத்தியுரை எழுதினுல் அவரது கொள்கைக்கும், தங்களது கொள்கைக்கும் வித்தியாசம் ஏற்படும், பத்மபாதரை விருத்தியுரை எழுதும்படி சொல்வதுதான் சிறந்ததாகும். ஏனெனில் அவருக்குத் தங்களிடத்தில் அதிக பக்தியும், வணக்கமுமுண்டு. அவர் தங்களது அபிப்பிராயத்தை ஒட்டியே நடந்து வருகிறுர்" என்றுர்கள்.

பத்மபாதர் "ஐயா, அநந்தகிரியாரையாவது அல்லது ஹஸ்தாமலகரையாவது அவ்வித விருத்தியுரையையெழுதச் சொல்லலாம்" என்று சொன்னுர்.

இவ்விதம் சீடர்களில் ஒருவர் மற்ருெருவர்மீது பொருமை கொள்வது எம் மதத்தினரிடத்திலும் குடிகொண்டிருக்கிறது. பைபிலில்கூட இயேசு கிறிஸ்துவினுடைய சீடர்கள் முதன்மை பெறச் சண்டை செய்

தது நமது ஞாபகத்திற்கு வருகிறது. சங்கரர் இவ் வித அபிப்பிராய பேதத்தைக் கண்டு கடைசியாக பத்மபாதரை விருத்தியுரை எழுதும்படியும், மண்டன மிச்ரரை உபநிஷதங்களுக்குத் தாம் எழுதிய உரைக்கு விருத்தியுரை எழுதும்படியும் உத்தரவு செய்தார்.

பத்மபாதர் தம் குரு எழுதிய உரைக்கு விருத்தி யுரை எழுதி முடித்தார். அதில் விசேஷமாக பூர்வ மீமாம்ச தத்துவங்களின் ஆபாசங்களை விளக்கிக் காட்டி, அவர்களது கொள்கையைப் பற்றி இழிவாக எழுதினர். அதனால் பத்மபாதர் கர்வமுள்ளவரென்று எண்ணும்படியாயிற்றும். மண்டனமிச்ரர் எழுதியிருந் தால் பத்மபாதர் எழுதிய விருத்தியுரையைவிடச் சிறந் ததாயிருக்கும் என சங்கரருடைய அபிப்பிராயம். அக் காலத்தில் அவர்களுக்குள் பொறுமையும், சந்தேக மும் குடிகொண் டிருந்ததைப் பற்றி ஆச்சரியப்பட இடமில்லை.

பின்பு பத்மபாதர் தம் குருவின் உத்தரவு பெற்று இராமேஸ்வரம் போகப் புறப்பட்டு தமது சொந்த இருப்பிடமாகிய சிதம்பரத்திற்கு வந்தார். அங்கு அவருடைய உறவினர்கள் வசித்திருந்தனர். அவர் ஒரு வேளை அவர்களுக்குத் தமது கல்வித் திறமை யைக் காண்பிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் சென்றுலும் சென்றிருக்கலாம். அங்கு தம் மாமன் வீட்டில் தங்கினும். தம் விருத்தி யுரையை மாம னுக்குக் காண்பித்தார். அவருடைய மாமன் விருத்தி யுரையின் சில பாகங்களைப் பார்த்தார். அது தமது கொள்கைக்கு நேர் விரோதமா யிருப்பதைக் கண்டு அவர் விசனமுற்றார். இவர்மீது மிக்க கோபங் கொண் டார். எவ்விதமாயாவது அந்த விருத்தியுரையை

அழித்துவிட வேண்டு மென்று தீர்மானம் செய்து கொண்டார்.

பத்மபாதர் சிறிதும் முன் யோசனை செய்யாமல் தாம் எழுதிய விருத்தியுரையைத் தம் மாமனிடத்தில் கொடுத்துவிட்டு இராமேசுவரத்திற்குச் சென்றார். அவர் சென்ற பின்பு அவருடைய மாமன் தன் வீட்டிலுள்ளோரை ரகசியமாய்த் தங்கள் பொருள்களையும், துணிமணிகளையும் எடுத்துக்கொண்டு வேறொரு வீட்டிற்குப் போகும்படி செய்தார். மறு நாள் அவ் வீட்டை அக்கினி பகவானுக்கு இரை யாக்கினர். அடுத்த நாள் காலையில் பத்மபாதர் எழுதிய சிறந்த விருத்தி யுரை அக்கினிக்கு இரையாய்விட்டதைக் குறித்து மிகவும் விசனப்படுபவர்போல் பாசாங்கு செய்துகொண் டிருந்தார்.

பத்மபாதர் மாயூரம், மத்தியார்ச்சுனம், கும்பகோணம், மதுரை முதலிய ஸ்தலங்களுக்குச் சென்று காவேரி நதியில் ஸ்நானம் செய்து, கடவுளைத் துதி செய்தனர். அவர் சென்ற விடங்களி லெல்லாம் அத்துவைத உண்மையை யாவருக்கும் போதித்து வந்தார். பின்பு தர்ப்ப சயனம் சென்று அகஸ்தியமகாரிஷியைக் கண்டு வணங்கினர். அவருடைய உபதேசம் பெற்று இராமேசுவரம் சென்று அரபிக் கடலும், வங்காளக் குடாக் கடலும் கூடும் சங்கமத்தில் ஸ்நானம் செய்து இராமலிங்கத்தைப் பூசித்தார். பின்பு அங்கும் அத்துவைத மதம் பரவும்படி பல உபந்நியாசங்கள் செய்தார்.

கடைசியாக சிதம்பரத்திற்குத் திரும்பி வந்தார். அங்கு வந்ததும் தாம் எழுதிய விருத்தியுரை அக்னிக்கு

இரையானதைக் கேட்டு வருந்தினர். நான் மறுபடியும் எவ்விதம் விருத்தியுரை எழுத முடியுமென்றும் விசனித்தார். "மருமகனே, எனது பொருளும், வீடும் போயிற்றென்று சிறிதும் நான் விசனப்படவில்லை. நீ அருமையாய் எழுதிய விருத்தியுரை அழிந்துவிட்டதைக் குறித்து மிகவும் துக்கப்படுகிறேன்" என்று மாமன் சொன்னாராம். இதைக்கேட்ட பத்மபாதர் மனந் தளர்ந்து, சிருங்ககிரிக்குச் சென்று தாம் செய்த ஸ்தல யாத்திரையைப் பற்றியும், தமது உரை அக்னிக்கு இரையானதைப் பற்றியும் சங்கரருக்குச் சொன்னர்.

சங்கரர் சிறிதுகாலம் சிருங்ககிரியில் அத்துவைத உண்மையையும், சாஸ்திரங்களின் ஆராய்ச்சியையும் பாமர ஜனங்களுக்கும், வித்துவான்களுக்கும், அரசர்களுக்கும் போதித்து வந்தார். அத் தேசத்திலுள்ளோர் யாவரும் அவரைக் குருவாக விருக்கும்படி வேண்டிக்கொண்டு அவரிடம் உபதேசம் பெற்றார்கள்.

சிறிது காலஞ் சென்றபின்பு சங்கரர் தம் மாணாக்கர்களுடன் கிழக்குக் கரையிலுள்ள தேசங்களைச் சுற்றிப் பார்த்தார். ஆங்காங்குள்ள அசுரர்களும் வித்துவான்களும் சங்கரரை மனமகிழ்ச்சியுடன் வரவேற்று மரியாதை செய்தார்கள். சங்கரர் அங்குள்ள அநாகரிகச் செய்கையை விட்டுவிடும்படி ஜனங்களுக்குப் போதித்துவந்ததுடன், அத்துவைத உண்மையையும் செவ்வனே யாவருக்கும் விளங்கும்படி எளிதில் புகட்டி வந்தார்.

காஞ்சிபுரம் வெகு காலமுதல் மிக்க பெயர் பெற்ற புண்ணிய க்ஷேத்திரமாக வழங்கி வருகிறது. ஆனல் அவ்விடத்தில் சக்தி பூசை செய்வோர் அநேகர் இருந்

தார்கள். சங்கரர் காமாக்ஷி அம்மனைத் தரிசித்து அங்கு காமகோடி யந்திரத்தை ஸ்தாபித்தார். வரத ராஜப்பெருமாளையும் வணங்கி அவருக்கு அர்ச்சனை செய்த பின் அவ்வூர் ஜனங்களுக்கு அத்துவைத உண்மையைப் போதித்தார். மேலும் அவ்வூரி லுள்ளவர்கள் வெறுப்புக் கிடமாயுள்ள சக்தி பூஜை செய்வதைக் கண்டித்தார். கோயில்களைப் பரிசுத்தமாக்கினர்.

அங்கிருந்து சங்கரர் சிதம்பரத்திற்கு வந்தார். இங்கும் அத்துவைத மதத்தைப் பற்றி உபந்நியாசம் செய்து ஞான வித்தையை யாவருக்கும் வெளிப்படுத்தினர். பின்பு இராமேசுவரம் சென்று அங்கு ஸ்நானம் செய்து நித்திய கடனை முடித்துக்கொண்டு சந்தேகத்தை மறுத்து, அத்துவைத உண்மையை போதித்தார். அங்கிருந்து மதுரைக்கு வந்து மீனாக்ஷியம்மையாரையும், சுந்தரேசுவரரையும் தரிசித்தார். பாண்டிய அரசனும் அவருக்கு மரியாதை செய்தான்.

அங்கிருந்து சோழ தேசத்திலுள்ள சிறந்த புண்ணிய ஸ்தலங்களாகிய ஸ்ரீரங்கம், திருவானைக்காவல், சீர்காழி, திருப்பதி, காளஹஸ்தி முதலிய திவ்ய க்ஷேத்திரங்களுக்கும், ஆந்திர தேசங்களுக்கும் சென்று அங்குள்ள அரசர்களால் வரவேற்கப்பட்டு உபசரிக்கப்பட்டார்.

இங்கு சங்கரர் தமது கொள்கையைப் பரவச் செய்தபின், பூரி என்னும் ஜகன்னாதத்துக்குச் சென்றார். அங்கு கோவர்த்தனமடம் என்ற மடத்தை ஏற்படுத்தி, அதற்குத் தம் சிஷ்யர்களில் ஒருவரைத் தலைவராக நியமித்தார். இவர் அவ்விடங்களில் விஜயஞ் செய்தமையால் அங்கு ஜனங்கள் வழங்கி வந்த கெட்ட நடவடிக்கைகள் ஒழிந்தன. ஜனங்களும் சீர்திருத்த

மடைந்து கடவுளை வணங்கி சன்மார்க்கத்தில் நடக்க லானார்கள்.

சிருங்ககிரி மடத்தில் அநேக வித்துவான்களை வைத்து வரவும், கெட்ட நடவடிக்கைகள் நடக்கு மிடங்களுக்கு அவர்களை அனுப்பி அவ்விதச் செயல்களை நீக்கி வரவும் கண்டிப்பான ஏற்பாடு சங்கரர் செய்தார்.

தென்னிந்தியாவில் இவ்வித சீர்திருத்தங்களைச் செய்தபின் சங்கரர் தம் சீடர்களுடன் இந்துஸ்தா னத்திற்கு (வட இந்தியாவுக்கு)ச் சென்றார். பீரார் வழியாகச் சென்று உஜ்ஜினியில் சிலகாலம் தங்கியிருந் தார். அங்குள்ள ஜனங்கள் பைரவரைப் பூசித்தும் அத்தேவதைக்கு நரபலி கொடுத்தும் வந்தார்கள். இதைக் கேட்டதும் சங்கரர் நடுநடுங்கினார். அவர் களைக்கண்டு பரிதாபங்கொண்டார். அவர்களுடைய தலைவனாகிய கிரகசன் என்பானை சங்கரர் நல்வழிக் குக் கொண்டு வந்தார். அவனுக்கு அத்துவைத உண்மை நன்றாய் விளங்கும்படி தாமே போதித்தார். அவனுடைய உதவியால் பைரவபூஜை செய்பவர்களை அவ்விதம் செய்யக்கூடாதெனத் தடுத்தார். ஏனெனில் அவர்களுடன் வாதாடியபொழுது அவர்கள் மூட பக்தியால் சங்கரருடைய புத்திமதியைக் கேட்கவில்லை. ஆனதுபற்றி அவர்களது தலைவனைக் கொண்டு அவர் களைக் கட்டாயப்படுத்தி அவர்களது கெட்ட நடவடிக் கையை நீக்கவேண்டியதாயிற்று.

இவ்விடத்திலுள்ள ஜனங்களை நல்வழிக்குக் கொண்டுவந்தபின் கூர்ஜ்ஜரத்திற்குச் சென்றார். பின்பு துவாரகைக்குப் போய் அங்கு ஒரு மடத்தை ஸ்தா பித்தார். அதற்கு ஹஸ்தாமலகர் என்ற சீடரைத்

தலைவராக நியமித்து அவ்வூரில் அத்துவைத உண்மையை அவ்வூர் ஜனங்களுக்குப் போதித்து வந்தார். அங்கு சிறிதுகாலம் இருந்தார். அந்த மடமும் இப்பொழுது நன்றாக நடத்தப்பட்டு வருகிறது. அதற்கு அநேக சீடர்களிருக்கின்றார்கள்.

சங்கரர் கங்கையின் கரையோரமாக பல முக்கிய ஸ்தலங்களுக் கெல்லாம் சென்றார். பதரிநாராயணத்திற்குப்போய் அங்கே ஒரு மடத்தை ஏற்படுத்தினார். அதற்கு ஆனந்தகிரியாரை (தோடகாசாரியார்) த் தலைவராக நியமித்தார். வழியில் பாஸ்கரர், பாணர், தந்தின், மாயூரர் முதலிய சிறந்த வித்துவான்களுடன் தர்க்கம்செய்து ஜயம்கொண்டார். அவர்களையெல்லாம் தமது கொள்கைக்குள்ளாக்கினார்.

பின்பு சங்கரர் தம் மாணாக்கர்களுடன் காஷ்மீர நாட்டிற்குச் சென்றார். அங்கு ஸ்ரீநகர் என்ற பட்டணமுளது; அது கல்விக்குப் பேர்பெற்றது. அங்கு அநேக வித்துவான்களிருந்தார்கள். அங்கு சரஸ்வதிபீடமொன்றிருந்தது. ஒரு சரஸ்வதி தேவாலயமு மிருந்தது. அங்குள்ள வித்தியாபீடத்தின்மீது சங்கரர் ஏற நினைத்து அதன்மீது ஏறினாராம் இது வரையிலும் ஒருவராலும் ஏறமுடியாத பீடத்தின்மீது சங்கரர் ஏறினமையால் அவ்வூர் அரசன் முதலியவர்கள் சங்கரருடைய பிரசங்கத்தைக்கேட்டு அவருடைய மதத்தில் சேர்ந்தார்கள்.

அவ்விடத்திலிருந்து சங்கரர் புறப்பட்டு நேபாளம் வந்தார். அங்கிருந்து அஸ்ஸாம் நாட்டி லுள்ள கோஹட்டிக்குப் போனார். அதற்கு முன்காலத்துப் பெயர் காமரூப பட்டணம். அங்கு அபிநவகுப்தர் என்ற வித்துவா னிருந்தார். அவர் சாக்கேய மதத்தில் சேர்ந்தவர். அவர் மந்திரவாதி. கெட்ட எண்ணமுடையவர். தெய்வபக்தி சிறிதும் அவரிடத்திலில்லை. கடின நெஞ்சுடையவர். இவ்வித குணம் வாய்ந்த

வரைச் சீர்திருத்த சங்கரர் எண்ணி அவருடன் தர்க்கம் செய்தார்.

அபிநவகுப்தர் தோல்வியடையவே, பொறாமையும் கெட்ட எண்ணமும் அவரிடத்தில் குடிகொண்டிருந்தன. உடனே தமது மந்திரசக்தியால் சங்கரருக்கு வியாதி வரும்படி செய்தார். சங்கரர் வியாதி, பசி, சாகம் தேகசுகம் முதலியவைகளைச் சிறிதும் கவனியாமலே இதுவரையினு மிருந்தார். அவ்விதமே சங்கரர் இவ்வியாதியையும் ஒரு பொருட்டாக எண்ணவேயில்லை. இதனால் அவர் சிறிதும் வருந்தினவருமல்லர்.

ஆயினும் வியாதி அதிகரித்ததை சங்கரருடைய சீடர்கள் கண்டு சிறந்த வைத்தியர்களிட மிருந்து ஔஷதம் வாங்கிக் கொடுத்தார்கள். அதனாலும் வியாதி நீங்கவில்லை. ஒரு பெரியவர் சீடர்களிடம் வந்து, "சீடர்களே! சங்கரருக்கு வியாதி உண்டாகும்படி துஷ்டனாகிய அபிநவகுப்தன் தன்மந்திர சகதியால் செய்திருக்கிறான். அவருக்கு வேறுவியாதி யொன்றுமில்லை," என்று சொல்லி மறைந்துவிட்டார்.

அப்பொழுது பத்மபாதருக்குண்டான கோபத்திற்களவில்லை. பத்மபாதர் தமது மந்திரசக்தியால் தமது குருவுக்கு வந்திருக்கும் வியாதியை நீக்கி, 'அது அபிநவகுப்தனிடம் செல்லக் கடவது' என்றார். சங்கரர் முன்போல் சௌக்கியமடைந்தார். அவ்வியாதி அபிநவகுப்தனுக்கு உண்டாயிற்று.

பின்பு சங்கரர் தம் மாணக்கர்களுடன் பதரி நாராயணத்திற்குச் சென்று ஸ்ரீமந் நாராயணனுக்கு ஒரு கோயில் கட்டிவைத்து, அங்கொரு மடத்தையும் ஸ்தாபித்தார். பின்பு தமது சீடர்களையெல்லாம் வரவழைத்து தங்களது கடமையைச் சரிவரச் செய்துவரவேண்டுமென்றும், உலகத்திலுள்ள அநாகரிகச் செயல்களை நீக்க முயலவேண்டுமென்றும், ஜனங்க

ளுக்கு நற்காரியங்களையும், நல்லொழுக்கம் முதலியவைகளையும் போதிக்கவேண்டுமென்றும், அத்துவைத உண்மையை யாவருக்கும் போதித்து வரவேண்டுமென்றும் சொன்னார்.

இவ்விதம் சங்கரர் செய்த பின்பு கோகர்நாத் என்ற புண்ணியஸ்தலத்திற்குச் சென்றார். அங்கு சிறிதுகால மிருந்த பின்னர் கிறிஸ்து பிறப்பதற்கு முன் 477-வது வருஷத்தில் சங்கரர் பரமகதியடைந்ததாக ஒரு சார்பார் சொல்லுகிறார்கள்.

மற்றொரு சார்பார் இவர் இமாலயமலையில் ஒரு குகையில் நுழைந்து யாவர் கண்ணுக்கும் புலப்படாமல் மறைந்து யோகநிஷ்டையி லிருக்கின்றா ரென்றும் சொல்லுகிறார்கள்.

சரித்திரக்காரர்கள் இவர் கிறிஸ்து பிறந்த பின் 788-வது வருஷத்தில் ஜனித்து 828-வது வருஷத்தில் மோக்ஷ மடைந்தா ரென்றும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

எது எப்படி யிருப்பினும் சரி. சங்கரர் உலகத்தாருக்கு நன்மை செய்யவே அவதரித்தா ரென்பது தெளிவாய்த் தெரிகிறதல்லவா? அவர் சுயநன்மையைத் தமது சிறுவயதுமுதல் சிறிதும் கருதவில்லை. தம் பெற்றோரிடத்தில் வணக்கமும், மரியாதையும், அன்புமுடையவரா யிருந்தார். சந்நியாசியா யிருப்பவர்கள் தங்கள் தாய்தந்தையர்களுக்குக் கருமம் செய்யத்தான் வேண்டும் என்பதாக சாஸ்திரங்களி லில்லை. அவ்விதம் செய்யாவிடின் அவர்களுக்குப் பாபம் உண்டாகு மென்றும் சாஸ்திரங்களிலில்லை. ஆனால் சந்நியாசிகள் அவ்விதம் செய்தால் பாபம் என்றாவது சாஸ்திரத்திற்கு விரோத மென்றாவது சொல்லப்படவுமில்லை.

சந்நியாசியாகிய சங்கரர் தம் அன்னையாருக்குக் கர்மம் செய்ததி லிருந்து அவருக்கு தம் தாயாரிடத்தில் மிகுந்த அன்பு உண்டென்பது தெளிவாய் விளங்குகிறதல்லவா ?

சங்கரர் சத்தியவந்தர். சொன்னபடி செய்வார். தம் தாயார் மரணத்தருவாயி லிருப்பதாகக் கேள்விப் பட்டவுடன் சங்கரர் தம் தாயாரைப் பார்க்கச் சென்றார்.

சங்கரருக்கு அநாகரிகச் செயல்களை நீக்குவதிலும் ஜனங்களுக்கு நற்குணம், தெய்வபக்தி, மோக்ஷமடையும் மார்க்கம் முதலியவைகளைப் போதிப்பதிலும் மிக்க அவாவுண்டு. அவ்விதமே செய்துவந்தார்.

சங்கரருக்குக் கோபம் சிறிதும் வந்ததில்லை. ஆனதுபற்றித்தான் தம்மைக் கொல்லவந்தவனைத் திட்டவு மில்லை, சபிக்கவுமில்லை. தம் உயிரைச் சிறிதும் பெரிதாக மதிக்காமல் "என்னைப் பலி கொடு" என்று தைரியமாய்ச் சொன்னார்.

சங்கரர் ஞானியாயிருந்தமையால் பக்திசாகரத்தில் மூழ்கியிருந்தார். கடவுளிடத்து முதிர்ந்த பக்தியை ஜனங்களுக்குப் போதிக்க வேண்டுமென்ற எண்ணமும், இரக்கமும் சங்கரருக்கு அதிகமாக உண்டு.

சங்கரர் காசியில் வசித்து வருமபொழுது விடியற்காலையில் எழுந்து ஸ்நானம்செய்ய கங்காநதிக்குப்போய் வருவார். அவ்விதம் செய்து வருகையில் ஒருநாள் இவர் செல்லும்வழியில் ஒருவன் தன் வீட்டுத் தெருத் திண்ணையில் உட்கார்ந்து (பாணினி சூத்திரத்தை) இலக்கண சூத்திரங்களை மனப்பாடம் செய்துகொண்டிருந்தானாம். அவனை சங்கரர் பார்த்து, "பிள்ளாய் ! உனக்கு மரணம் உண்டாகும்பொழுது இந்த இலக்கண சூத்திரங்கள் உன்னைக் காப்பாற்றாது, உனக்கு மோக்ஷமடையும் மார்க்கத்தையும் காண்பிக்காது. ஆகை



காலடியிலுள்ள ஆதி சங்கராசாரியாருடைய ஆலயம்

யால் *மூடனே, கோவிந்தனைத் துதிசெய், கோவிந்தனைத் துதிசெய்' என்று அவனுக்குப் புத்தி புகட்டினாராம்.

இவ்வித குணம்வாய்ந்த சங்கரர் அவதரித்து ஜனங்களுக்கு அத்துவைத உண்மையைப் போதித்து வந்தார். ஆங்காங்கு மடங்களை ஸ்தாபித்தார். இவருக்குப்பின் பல ஆசாரியர்கள் சிருங்ககிரி மடத்திற்கு அதிகாரிகளாக வந்து அவரது கொள்கையின்படி நடந்துவந்தார்கள் இப்பொழுது சிருங்ககிரிமடத்திலுள்ள ஆசாரியாரவர்களுக்கு முன்னிருந்த சுவாமிகள் காலடியில் ஒரு கோயிலையும், மடத்தையும் பல சத்திரங்களையும் கட்டிவைத்து, கோயிலில் ஆதிசங்கரரையும், சாரதாம்பாளையும் பிரதிஷ்டைசெய்து வெகு விமரிசையாக கும்பாபிஷேகமும் செய்வித்தார்கள்.

அச்சமயத்தில் இந்தியாவிலுள்ள அநேக இந்து ராஜாக்களும், பிரபுக்களும், சீமாட்டிகளும், சீடர்களும் திரள் திரளாகச் சென்று அந்தக் கும்பாபிஷேக வைபவத்தைக் கண்டு களித்தார்கள்.

இக்கோயில் ஆள்வாய் நதிக்கரையி லிருக்கிறது. இங்கேதான் இவருடைய தாயாரை இவர் தகனம் செய்த இடமு மிருக்கிறது இப்புண்ணிய க்ஷேத்திரத்திற்கு அநேக சீடர்கள் வருஷாவருஷம் செல்லுகிறார்கள். ஆதி சங்கராசாரிய சுவாமிகளை எப்பொழுதும் யாவரும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுமாறு இவ்விதம் அவர் பிறந்தவிடத்தில் ஒரு கோயில் கட்டப்பட்டிருக்கிறது இந்தியாவின் பாக்கியமேயாம். இவ்விதமே ஒவ்வொருமகானுக்கும் செய்யவேண்டியது நமது முக்கியகடமைதான்.

---

* "பஜகோவிந்தம், பஜகோவிந்தம் பஜகோவிந்தம் மூடமதே" என்று முதலில் வரும்படியாகப் பத்து சுலோகங்களை அப்பொழுதே சங்கரர் இயற்றினார். இச்சுலோகங்களை இந்தியாவிலுள்ள பக்திமான்கள் இப்பொழுதும் படித்து கடவுளைத் துதிசெய்யும் பொழுது சொல்லி வருகிறார்கள்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சிதம்பரம்

## இராமலிங்கசுவாமிகள்

அருளிச்செய்த

# திருவருட்பாத் திருமுறை

ஆறுதிருமுறைகளும், பதிகங்களும், உலகியலும்,
சரித்திரமும், முகவுரையும் கூடியது

சென்னைப் பச்சையப்பன் கலாசாலைத் தமிழாசிரியரும்
'சித்தாந்தம்' பத்திராசிரியருமாகிய

**திருவாளர் - மணி. திருநாவுக்கரசு முதலியார்**

அவர்களால் பார்வையிட்டு

**அ. இரங்கசாமி முதலியார் அண்டு சன்ஸ்**

அவர்களது

**சென்னை பூமகள் விலாச அச்சுக்கூடத்தில்**

பதிப்பிக்கப்பட்டது

இதன் விலை | **1928** | ரூபா 7

TITLE PAGE PRINTED AT THE NEWMAN PRESS, MADRAS